# THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION

## FORM -3

## MINUTES OF THE COUNCIL MEETINGS

## (See rule 5 and Serial Number 3 of Appendix 1)

### அவசரக் கூட்டப்பொருள்

2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 30.03.12 | 1. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பீச்ரோட்டுடன் இணைந்த மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலக அணுகுசாலையில் சாலை அகலப்படுத்தும் பணி மற்றும் போக்குவரத்திற்கு இடையூராக உள்ள மின் கம்பங்கள் மாற்றி அமைக்கவும், இப்பணியை மின்வாரியம் மூலம் செய்து கொள்ளவும் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்<br>இ3/00346/2011 | 28) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 2. | இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஆண்டு குத்தகை இனங்களின் கீழ் மாமன்ற தீர்மான எண் 63 நாள் 22.03.2010, மாமன்ற தீர்மான எண் 95 நாள் 19.04.2010ல் அனுமதிக்கப்பட்ட 27 இனங்களுக்கு உயர்ந்தபட்ச கேள்வி அனுமதிக்கப்பட்டு உரிமம் வழங்கப்பட்ட உரிமைதாரர்களுக்கு அவர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள இரண்டாண்டு தொகுப்பான 2011–12ம் வருட உரிமத் தொகையில் 5% உயர்வு செய்து 2012–2013ம் வருடம் உரிமம் நீடித்து வழங்க கோரி 27 உரிமைதாரர்கள் சமர்ப்பித்துள்ள சம்மதக் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | 29) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | ஏல இனம் | உரிமைதாரர் பெயர் மற்றும் முகவரி | 2011–12 ஆண்டு ஏலத் தொகை | 5% உயர்வு தொகை | 2012–2013ம் ஆண்டு நிர்ணயம் செய்ய வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | விக்டோரியா தொடர் சாலையில் உள்ள வ.உ.சிதம்பரம் மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்க உரிமை மற்றும் மீன் சந்தை வியாபாரிகளுக்கு தட்டு முட்டு சாமான்கள் சப்ளை செய்து கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு கே.சிம்சன் 79ஏ,எஸ்.பி.ஜி. கோயில் தெரு, தூத்துக்குடி | 936600/– | 46830/– | 983430/– |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2. | எஸ்.எஸ்.தெரு மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திருமதி சி.நளினி, க/பெ.ஆர்.சந்திர சேகர், 58,வடக்கு வாணியன் விளை, தூத்துக்குடி | 103950/– | 5198/– | 109148/– | |
| | | 3. | சிதம்பரநகர் மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு பி.குமார், த/பெ. பெருமாள், 30/4,டுவிபுரம் 11வது தெரு, தூத்துக்குடி | 268800/– | 13440/– | 282240/– | |
| | | 4. | கீழரதவீதி தொடர்ச்சி மற்றும் கீழரத வீதி சாலை ஓரகடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு எம்.அமீது, த/பெ. முகமது அப்துல்லா, 111/67/14, போல்பேட்டை, தூத்துக்குடி | 91508/– | 4575/– | 96083/– | |
| | | 5. | கோபால்சாமி தெரு சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | எஸ்.வேல்ராஜ், த/பெ.சண்முகராஜ் 32,சேதுராஜாத் தெரு, தூத்துக்குடி | 104265/– | 5213/– | 109478/– | |
| | | 6. | தச்சர் தெரு மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திருமதி கே.பிரகாச சகிலா, /பெ.கோபாலராஜ், 47/5,ஆதிபராசக்தி நகர், தூத்துக்குடி | 29400/– | 1470/– | 30870/– | |
| | | 7. | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தினுள் வந்து போகும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 15 கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு அ.லெட்சுமிகாந்த், த/பெ.ஏ.சி. அருணாசலம், 156,பூபால்ராயர்புரம், தூத்துக்குடி மா.தி.எண் 357 நாள் 11.07.2011 | 840000/– | 42000/– | 882000/– | |
| | | 8. | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்திலுள்ள சைக்கிள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு என்.செல்லபாண்டி, த/பெ.என். நாராயணன், 73இ,போல்பேட்டை, தூத்துக்குடி | 346500/– | 17325/– | 363825/– | |
| | | 9. | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்திலுள்ள நவீன கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு கே.சுந்தரவேல் த/பெ. கந்தசாமி 41/1,கே.வி.கே.நகர், தூத்துக்குடி | 126000/– | 6300/– | 132300/– | |
| | | 10. | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்திலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் பூ தலை சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | திரு எம்.செண்பகராஜ், த/பெ.முத்துவேல், 61பி/1சி, போல்பேட்டை, தூத்துக்குடி | 17850/– | 893/– | 18743/– | |
| | | 11. | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தலை சுமை மூலம் வளையல் கூவி விற்கும் உரிமை | திரு எம்.செண்பகராஜ், த/பெ.முத்துவேல், 61பி/1சி,போல்பேட்டை , தூத்துக்குடி | 50400/– | 2520/– | 52920/– | |
| | | 12. | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தலைசுமை மூலம் செய்தித்தாள் கூவி விற்கும் உரிமை | என்.சி.நாராயணன், த/பெ.என்.செல்லபா ண்டி 73/11இ, போல்பேட்டை, தூத்துக்குடி | 34125/– | 1706/– | 358531/– | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 13. | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் மாநகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் ஒரு தானாக இயங்கும் எடை பார்க்கும் இயந்திரம் நிறுவிக்கொள்ளும் உரிமை | திரு வி.ராம்குமார், த/பெ. வரதராஜ், 61ஏ, போல்பேட்டை, தூத்துக்குடி | 5040/– | 252/– | 5292/– | |
| | | 14. | மாநகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தினுள் வந்து போகும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 8/– கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு எஸ்.வி.ஜெயசீலன், 27, வாணியன் விளை தெற்கு, தூத்துக்குடி | 614250/– | 30713/– | 644963/– | |
| | | 15. | மாநகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தினுள் நவீன கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு பி.குமார் த/பெ. பெருமாள் 63ஏ, டூவிபுரம் 11ம் தெரு, தூத்துக்குடி | 235200/– | 11760/– | 246960/– | |
| | | 16 | மாநகராட்சி அண்ணாபேருந்து நிலையத்தினுள் கீழ்புறம் மற்றும் மேல்புறத்திலுள்ள சைக்கிள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு ஜெ.பெரியராஜ், த/பெ. ஜெபமணி, 37/4,டூவிபுரம் 7ம் தெரு, தூத்துக்குடி | 216405/– | 10820/– | 227225/– | |
| | | 17. | மாநகராட்சி அண்ணா பேருந்து நிலையத்திலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் பூ தலை சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | எஸ்.என். கணேசன், 21, சங்கராபுரம், தூத்துக்குடி | 160230/– | 8012/– | 168242/– | |
| | | 18. | மாநகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் தலை சுமை மூலம் செய்தித்தாள் கூவி விற்கும் உரிமை | திரு மீனாட்சி விஸ்வநாதன், த/பெ.பி.நம்பி, 24ஜே,பிரையண்ட் நகர் 4வது தெரு, தூத்துக்குடி | 20685/– | 1034/– | 21719/– | |
| | | 19. | மாநகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் தலை சுமை மூலம் வளையல் கூவி விற்கும் உரிமை | திருமதி எம்.வேலம்மாள், க/பெ.ஜி.முத்தையா, 9,அண்ணாநகர் 3ம் தெரு, தூத்துக்குடி | 37590/– | 1880/– | 39470/– | |
| | | 20 | மாநகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் மாநகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் ஒரு தானாக இயங்கும் எடை பார்க்கும் இயந்திரம் நிறுவிக் கொள்ளும் உரிமை | திரு இ.ரவிக்குமார், த/பெ. டி.எபனேசர், 145ஏ/5,தாமோதர நகர், தூத்துக்குடி | 6825/– | 341/– | 7166/– | |
| | | 21. | மாநகராட்சி தெற்கு காட்டன் ரோடு நவீன கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு டி.ஜெபஸ்தியான், 5/41,பீச்ரோடு, இனிகோ நகர், தூத்துக்குடி | 179550/– | 8978/– | 188528/– | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22. | மாநகராட்சி மாசிலாமணி பூங்காவிலுள்ள நவீன கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு இ.மனோகரன், த/பெ.எட்வர்ட் நாடார் 5,டேவிஸ்புரம் ரோடு, தூத்துக்குடி | 52290/– | 2615/– | 54905/– |
| 23. | மாநகராட்சி ஜெயராஜ் ரோட்டிலுள்ள மாநகராட்சி வணிக வளாக காம்பவுண்டுக்குள் மாநகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் நிறுத்தப்படும் சைக்கிள்க்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை | திரு பி. குமார், த/பெ. பெருமாள் 63ஏ, டூவிபுரம் 11ம் தெரு, தூத்துக்குடி | 96075/– | 4804/– | 100879/– |
| 24. | அண்ணா பேருந்து நிலையத்தில் தங்கும் விடுதியில் (4 டபுள் காட் ரூம், 8 சிங்கிள் ரூம் மேற்படி 12 அறைகளுக்கும் வாடகை கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு என்.எஸ்.பாலகிருஷ்ணன், த/பெ. நடராஜன், 18ஏ/20, திரவியபுரம் 4ம் தெரு, தூத்துக்குடி | 139650/– | 6983/– | 146633/– |
| 25. | மாநகராட்சி நவீன ஆட்டடிச் சாலையில் அறுக்கும் ஆடுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் வார்டு எண் 5, 17, 21, 25, 38, 43, 48, 50 | திரு அ.லெட்சுமிகாந்த், த/பெ.ஏ.சி.அருணாசலம், 156,பூபால்ராயர்புரம், தூத்துக்குடி மா.தி.எண் 357, நாள் 11.07.2011 | 218400/– | 10920/– | 229320/– |
| 26. | மாநகராட்சி பகுதியில் ஆடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (வார்டு எண் 5, 17, 21, 25, 38, 43, 48, 50 தவிர மீதமுள்ள வார்டுகள்) | என்.சி.நாராயணன், த/பெ.என்.செல்லபாண்டி 73/11இ, போல்பேட்டை, தூத்துக்குடி | 270900/– | 13545/– | 284445/– |
| 27. | மாநகராட்சி பகுதியில் மாடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு எஸ்.ஜான்சன், 93ஐ/26பி, அசோக் நகர் 2ம் தெரு, தூத்துக்குடி | 59850/– | 2993/– | 62843/– |
| | | | 5262338/– | 263120/– | 5525458/– |

**அலுவலகக் குறிப்பு**

மேற்கண்ட பட்டியலின்படி 27 குத்தகை இனங்களுக்கு 2010–2013ம் ஆண்டு பொது ஏல நிபந்தனை எண் 2ன்படி 2012–2013ம் ஆண்டிற்கு உரிமம் நீடித்து வழங்குமாறு தற்போதைய உரிமைதாரர்கள் கோரியுள்ள விண்ணப்பத்தினை ஏற்று கலம் 6ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குத்தகை தொகை 2012–2013ம் ஆண்டிற்கு 2010–2013ம் ஆண்டு பொது ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிமம் நீடித்து அனுமதி வழங்கலாம்.

அ16/510/2010

| | | |
|---|---|---|
| 3. | 2012–2013ம் ஆண்டில் இம்மாநகராட்சியின் உபயோகத்திற்கு பதிவேடுகள் படிவங்கள் மற்றும் எழுதுபொருட்கள் வாங்கவும் மற்றும் அச்சிட்டு பெறவும் உத்தேசமாக ரூ.30.00 லட்சம் செலவாகும். இச்செலவினத்தை மாநகராட்சி 2012–2013ம் ஆண்டிற்குரிய வருவாய் நிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 30. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1) அனுமதிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி மாநகராட்சிக்கு தேவையான பதிவேடுகள் படிவங்கள் அச்சிட்டு பெறுவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>சி4/1616/2012 | |
| | 4. தூத்துக்குடி மாவட்டம், இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி அவர்களின் கடிதத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2011–2012ன் கீழ் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தொகுதிக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட சாலைகள் அமைப்பது தொடர்பாக வேலை மதிப்பீடு பட்டியல் தயார் செய்து மேற்படி பணிக்கு மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.131.90 லட்சமாகும். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ2/7941/2011 நாள் 24.01.2012ல் தொகை ரூ.118.50 லட்சத்தில் சட்டமன்ற மேம்பாட்டு நிதியில் மேற்கொள்ளவும் ஒதுக்கீட்டை விட கூடுதலாக வரும் தொகை ரூ.13.40 லட்சத்தினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட பணிகள் எடுத்துச் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 31. அலுவலகக் குறிப்பின்படி பதிவு செய்யப்பட்டது |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் |
|---|---|---|
| 1. | தூத்துக்குடி திரேஸ்புரத்தில் அங்கன்வாடி மையம் அமைத்தல் | 4.75 |
| 2. | மடத்தூர் முருகேசன் நகரில் அங்கன்வாடி மையம் அமைத்தல் | 4.75 |
| 3 | மீளவிட்டானில் அங்கன்வாடி மையம் அமைத்தல் | 4.75 |
| 4 | லூர்தம்மாள்புரம் 2வது தெருவில் அங்கன்வாடி மையம் அமைத்தல் | 4.75 |
| 5 | முருகன் தியேட்டர் முன்புறம் உள்ள சாலையில் தார்ச்சாலை அமைத்தல் | 7.50 |
| 6 | கே.வி.கே. நகரில் பக்கிள் ஓடையில் நடைபாதை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைத்தல் | 5.00 |
| 7 | எஸ்.எஸ்.பிள்ளை மார்க்கெட் தெருவில் தார்ச்சாலை, கழிவுநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 15.00 |
| 8 | மாநகராட்சிக்கு கழிவுநீர் வாகனம் இரண்டு வாங்குதல் | 34.50 |
| 9 | சுந்தரவேல்புரம் 8வது தெரு மற்றும் சக்திவிநாயகபுரத்தில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.85 |
| 10 | கேம்ப் ஒன்று முத்துநகர் ஹார்பர் இணைப்பு சாலை மேம்பாடு செய்தல் (தார்ச்சாலை பணி) | 7.65 |
| 11 | புதுத்தெருவில் தார்ச்சாலை அமைத்தல் | 6.00 |
| 12 | மூன்றாம் மைல் பைபாஸில் நிழற்குடை அமைத்தல் | 5.00 |
| 13 | காமராஜர் காய்கறி மார்க்கெட் அருகில் நிழற்குடை அமைத்தல் | 5.00 |
| 14 | பூபால்ராயர்புரம் 6வது தெரு, 4வது தெரு மற்றும் 5வது குறுக்குத் தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.75 |
| 15 | அந்தோணியார் கோவில் தெருவில் கான்கிரீட் சாலை அமைத்தல் | 4.15 |
| 16 | லயன்ஸ் டவுணில் நியாயவிலைக் கடை அமைத்தல் | 4.50 |
| 17 | அமெரிக்கன் ஆஸ்பத்திரி ரவுண்டானாவில் நிழற்குடை அமைத்தல் | 5.00 |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ1/00004/2012

5. தூத்துக்குடி மாவட்டம், இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி அவர்களின் கடிதத்தில் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2011–2012ன் கீழ் தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட சாலை அமைப்பது தொடர்பாக வேலை மதிப்பீடு பட்டியல் தயார் செய்து மேற்படி பணிக்கு மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.4.65 லட்சமாகும். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ2/7391/2011 நாள் 12.01.2012ல் தொகை ரூ.4.00 லட்சத்தில் சட்டமன்ற மேம்பாட்டு நிதியில் மேற்கொள்ளவும் ஒதுக்கீட்டை விட கூடுதலாக வரும் தொகை ரூ.0.65 லட்சத்தினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட பணிகள் எடுத்துச் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் |
|---|---|---|
| 1. | தூத்துக்குடி மாநகராட்சி பண்டாரம்பட்டியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.65 |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ1/15877/2011

**32.** அலுவலகக் குறிப்பின்படி பதிவு செய்யப்பட்டது

6. இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மலேரியா தடுப்பு திட்டத்தின் சார்பாக, தற்பொழுது உள்ள பருவநிலை மாற்றத்தை முன்னிட்டும் கொசுக்களால் பரவும் நோய்களை தடுக்கும் பொருட்டும் ஜனவரி முதல் ஜுன் வரையிலான காலங்களுக்கு கொசுக்களை கட்டுப்படுத்தும் வேதி புகை மருந்து தெளிக்க தேவைப்படும் பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றை முறையே 250 லிட்டர் மற்றும் 2000 லிட்டர் அவசர அவசியம் கருதி வாங்கவும், அதற்கான தோராயமான செலவுத் தொகை ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்

எச்4/10463/09

**33.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

7. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், வாகன ஓட்டுநர்கள் போன்ற பணியாளர்களுக்கு 2012ம் வருடத்திற்கான காலனிகள் வழங்க உத்தேச செலவுத் தொகை ரூ.2.00 லட்சத்திற்கும், தூத்துக்குடி காதி நிறுவனத்திலிருந்து வாங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்.

எச்4/02357/2012

**34.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

8. இம்மாநகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூங்கா நீரேற்றும் நிலையத்தில் புதியதாக 250 கே.வி.ஏ. ஜெனரேட்டர் நிறுவும் பணிக்கு 11.01.2012ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மானம் எண் 474 நாள் 16.11.2011ல் அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு மெசர்ஸ் ரவ்கால் அன்கோ, மதுரை | மதிப்பீட்டிற்கு 0.1% குறைவு (ரூ.2373420) | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. | மெசர்ஸ் ஆனந்தா எண்டர்பிரைசஸ், மதுரை | மதிப்பீட்டிற்கு 0.006% அதிகம் (ரூ.2411600) | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**35.** அலுவலகக் குறிப்பின்படி ஒப்புக்கொள்ளப் பட்டது

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளார். குறைவாக கொடுத்துள்ள ரவ்கால் அண்கோ, மதுரை மதிப்பீட்டை விட 0.1% குறைவாக உள்ளதை மாமன்றம் ஒப்புக் கொள்ளலாம்.<br>இ3/14199/11 | |
| | 9. பக்கிள் ஓடை சீரமைப்பு நான்காம் கட்ட பணிகள் செய்வதற்கு ரூ.7.00 கோடிக்கு அரசு ஆணை எண் 121 நாள் 23.12.2011 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 03.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பக்கிள் ஓடை சீரமைப்பு 4ம் கட்ட பணிக்கான தொழில் நுட்ப உறை திறக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்களை வைத்து ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது.<br><br>1) திரு எஸ். சுதர்சன், தூத்துக்குடி<br>2) திரு எஸ். ரெக்ஸ், தூத்துக்குடி.<br><br>மேற்படி பணிக்கு வரிசை எண் 2ன் ஒப்பந்ததார் திரு எஸ். ரெக்ஸ், தூத்துக்குடி அவர்கள் வகுப்பு எண் 4.1A.3, 4.1.A.4 மற்றும் 4.1.A.5ன்படி ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி பூர்த்தி செய்யப்படவில்லை. மேலும் தயாரிக்கப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் தலைமை பொறியாளர், நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களிடம் தொழில்நுட்ப கூட்டப்பொருளுக்கு 09.02.2012 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 13.02.2012 அன்று திரு எஸ். ரெக்ஸ், தூத்துக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டது. மேலும் திரு எஸ்.சுதர்சன், தூத்துக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி உறை 13.02.2012 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது. இதில் அவர் சமர்ப்பித்துள்ள விலைப்புள்ளி தொகை ரூ.72342691/– (மதிப்பீட்டு தொகையை விட 6.62 சதவீதம் அதிகம்) கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டது. அதனடிப்படையில் ஒப்பந்ததாரர் திரு எஸ்.சுதர்சன், தூத்துக்குடி அவர்கள் ரூ.71206817/– (மதிப்பீட்டு தொகையை விட 4.94 சதவீதம் அதிகம்) விலை குறைப்பு கொடுத்ததை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தினை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்<br>இ1/23660/2007 | 36. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 10. இம்மாநகராட்சிக்கு சொந்தமான டி.என் 69 டி.5052 கழிவுநீர் லாரி 07.12.98ல் வாங்கப்பட்டது. இதுவரை என்ஜின் வேலை எதுவும் பார்க்கப்படவில்லை. தற்போது தகுதி சான்றிதழ் பெறுவதற்கு என்ஜின் பணி மற்றும் சில்லறை வேலையினை பார்ப்பதற்கு செலவு ரூ.55000/– மாமன்றத்தின் அனுமதி வேண்டி அரசு அறிவித்த தொகை ரூ.32400/–க்கு கூடுதல் செலவினத் தொகை ரூ.22600/– செய்ய வேண்டியுள்ளது. தற்போது அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட பணி செய்த பின் தான் தகுதிச் சான்றிதழ் பெறவும் கூடுதல் செலவினம் செய்ததற்கு ஆணையர் அவர்களின் பின்னேற்பு பெறலாம். எனவே மேற்கண்ட செலவினத்தை மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ6/01380/12 | 37. அலுவலகக் குறிப்பின்படி அங்கீகரிக்கப்பட்டது |
| | 11. இம்மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற கீழ்க்கண்டுள்ள துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி தொகை கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு வழங்க வேண்டியதுள்ளது. | 38. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | பணியாளர் பெயர் திரு/திருமதி | ஓய்வு பெற்ற தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ. | வட்டி ரூ. | பங்கீட்டுத் தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | எஸ். சந்தணம்மாள் | 31.12.2010 | 2960/– | 3366/– | 10000/– | 16326/– |
| 2. | ஆவுடை/ மாடன் | 30.06.2011 | 2960/– | 12527/– | 10000/– | 25487/– |
| 3. | அப்பம்மாள்/ நிறைகுளம் | 30.06.2011 | 2960/– | 3404/– | 10000/– | 16364/– |
| 4. | வெள்ளை/வீர ன் | 30.06.2011 | 2960/– | 12527/– | 10000/– | 25487/– |
| 5. | மாரியப்பன்/ பெருமாள் | 30.06.2011 | 2960/– | 12527/– | 10000/– | 25487/– |
| 6. | ராஜு/ கருப்பன் | 30.06.2011 | 2960/– | 12527/– | 10000/– | 25487/– |
| 7. | வீரப்பெருமாள்/ பெருமாள் | 30.06.2011 | 2960/– | 12527/– | 10000/– | 25487/– |
| 8. | தெய்வானை/ முருகன் | 30.06.2011 | 2960/– | 3482/– | 10000/– | 16442/– |
| 9. | மூக்கன்/ சுப்பன் | 30.06.2011 | 2960/– | 12527/– | 10000/– | 25487/– |
| | **மொத்தம்** | | **26640/ –** | **85414/–** | **90000/–** | **202054/–** |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களுக்கு மேற்கண்ட தொகையினை வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்.

எச்2/2221/2011

12. இம்மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற கீழ்க்கண்டுள்ள துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி தொகை கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு வழங்க வேண்டியதுள்ளது.

**39.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | பணியாளர் பெயர் திரு/திருமதி | ஓய்வு பெற்ற தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ. | வட்டி ரூ. | பங்கீட்–டுத் தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | முனியசாமி/ முனியாண்டி | 31.07.2011 | 2960/– | 12623/– | 10000/– | 25583/– |
| 2. | முத்தம்மாள்/ மாடசாமி | 31.07.2011 | 2960/– | 4865/– | 10000/– | 17425/– |
| 3. | ராமகிருஷ்ணன்/ ஆறுமுகம் | 31.07.2011 | 2960/– | 12623/– | 10000/– | 25583/– |
| 4. | சக்திவேல்/ முத்து | 31.07.2011 | 2960/– | 12623/– | 10000/– | 25583/– |
| 5. | பால்ராஜ்/ மாரியப்பன் | 31.07.2011 | 2960/– | 12623/– | 10000/– | 25583/– |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | பெருமாள்/ ஆண்டி | 31.07.2011 | 2960/– | 12623/– | 10000/– | 25583/– |
| 7. | பஞ்சவர்ணம்/ சண்முகம் | 31.07.2011 | 2960/– | 5547/– | 10000/– | 18507/– |
| 8. | சக்கம்மாள்/ முத்துவீரன் | 31.07.2011 | 2960/– | 5547/– | 10000/– | 18507/– |
| 9. | தெய்வாணை/ வேலாயுதம் | 31.07.2011 | 2960/– | 6394/– | 10000/– | 19354/– |
| 10 | நடராஜன்/ முத்து | 31.07.2011 | 2960/– | 12623/– | 10000/– | 25583/– |
| 11 | பாண்டி/கருப்பன் | 31.07.2011 | 2960/– | 4465/– | 10000/– | 17425/– |
| 12 | சந்தணம்/ சுடலை | 31.07.2011 | 2960/– | 12623/– | 10000/– | 25583/– |
| 13 | இருளாண்டி/பெ மாட்டையன் | 31.07.2011 | 2960/– | 12623 | 10000/– | 25583/– |
| 14 | பெருமாள்/ முத்தையா | 31.07.2011 | 2960/– | 12623 | 10000/– | 25583/– |
| 15 | சந்தணபால் | 31.07.2011 | 2960/– | 12623 | 10000/– | 25583/– |
| 16 | முனியாண்டி/ கருப்பன் | 31.07.2011 | 2960/– | 12759/– | 10000/– | 25719/– |
| | **மொத்தம்** | | **47360/–** | **165807/–** | **160000/–** | **373167/–** |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களுக்கு மேற்கண்ட தொகையினை வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்.

எச்2/9842/2011

13. இம்மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் உழவர் சந்தைக்கு அருகிள்ள மாநகராட்சி திறந்தவெளி மைதானத்தில் மத சம்பந்தமான கூட்டங்கள் நடத்த நாள் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் கட்டணம் வசூலிக்க 29.06.2004 தேதிய மன்ற தீர்மானம் எண் 1004ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது மேற்படி மாநகராட்சி மைதானத்தில் உழவர் சந்தைக்கு மேற்கு பகுதியில் உள்ள இடத்தில் மத சம்பந்தமான கூட்டங்கள் நடத்த கட்டணம் நாள் ஒன்றுக்கு ரூ.2000/– மற்றும் துப்புரவு பணிக்கு ரூ.1000/– ஆக மொத்தம் ரூ.3000/– மற்றும் மத சம்பந்தம் இல்லாத பயன்பாட்டிற்கு நாள் ஒன்றுக்கு கட்டணம் ரூ.5000/– என நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

இம்மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் உழவர் சந்தைக்கு அருகிலுள்ள மாநகராட்சி திறந்தவெளி மேற்கு பகுதியிலுள்ள மைதானத்தில் மத சம்பந்தமான கூட்டங்களுக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு ரூ.3000/– (ரூபாய் மூவாயிரம் மட்டும்) மற்றும் மதசம்பந்தமில்லாத பயன்பாட்டிற்கு நாள் ஒன்றுக்கு கட்டணம் ரூ.5000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) நிர்ணயம் செய்யலாம்.

எப்1/433/2012

**40.** அலுவலகக் குறிப்பின்படி தீர்மானிக்கப்பட்டது

14. இம்மாநகராட்சியில் வருவாய் ஆய்வராக பணிபுரிந்து 31.12.2011ல் பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு சோ.முனியப்பன் என்பவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி தொகை ரூ.2960/–ம் அதற்கான வட்டி தொகை ரூ.2061/–ம் ஆக மொத்தம் ரூ.5021/–ம் மேற்படி தொகைக்கு 31.12.2011 வரைக்கான வட்டி தொகை ரூ.14999/–ம் ஆக மொத்தம் ரூ.20020/–ஐ தனியருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.

சி1/16421/11

**41.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

15. தூத்துக்குடி மாவட்டம் உதயமாகிய 25ம் ஆண்டை சிறப்பிக்கும் வகையில் கடந்த 29.11.2010ம் தேதி அன்று மாலைமலர் நாளிதழுதடன் வெளியிடப்பட்ட இணைப்பு புத்தகத்தில் தூத்துக்குடி மாநகராட்சியில் 2005–06 முதல் 2010–11 வரை நடைபெற்ற மற்றும் நடைபெறும் பணிகளின் விவரம் வெளியிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி வகைக்கு ஆகும் விளம்பரக் கட்டணத் தொகை ரூ.30000/–க்கு மேற்படி மாலைமலர் நாளிதழ் நிறுவனத்தார் பட்டியல் எண் VNI–010111206 நாள் 29.11.2010ல் விளம்பரக் கட்டணப் பட்டியலை இவ்வலுவலகத்திற்கு அனுப்பியுள்ளனர்.

எனவே மேற்படி பட்டியலில் கண்டுள்ள விளம்பர கட்டணத் தொகை ரூ.30000/–ஐ மேற்படி மாலைமலர் நாளிதழ் நிறுவனத்தார் சென்னை அவர்களுக்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ5/16285/11

**42.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

16. இம்மாநகராட்சியில் கட்டிட உரிமம் கட்டணம் 01.09.2002க்கு பின்னர் திருத்தம் செய்யப்படாமல் உள்ளது என உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ளது. எனவே அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டும், மாநகராட்சியின் வருவாயினை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படடியலின்படி (Schedule of Rates) கட்டிட உரிமம் மற்றும் இதர கட்டணங்கள் திருத்தியமைக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் ஒப்புதல் செய்யலாம். மேலும் மேற்கண்ட விவரம் 01.04.2012 முதல் அமுல்படுத்தலாம்.

எப்1/21218/05

## தூத்துக்குடி மாநகராட்சி

| வ. எண் | சட்டப் பிரிவு | விவரம் | பழைய கட்டணம் ரூ. பை | திருத்திய–மைக்கப் பட்ட கட்டணம் ரூ. | யூனிட் | அனுமதிச் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 272 | கட்டட உரிமையாணைக் கட்டணம்<br>அ) குடியிருப்பு உபயோக கட்டிடம்<br>ஆ) குடியிருப்பில்லாத கட்டிடம் | 13.00<br>16.00 | 16.00<br>20.00 | ஒரு சதுர மீட்டர் மற்றும் பாகத்திற்கு | 2 ஆண்டுகள |
| 2. | 272–1 | அ) தற்காலிக சினிமா தியேட்டருக்கு தடையின்மை சான்று வழங்குதல் | – | 25000/– | – | ஒரு தடைவ |
| | | ஆ) நிரந்தர சினிமா தியேட்டர் கட்ட தடையின்மை சான்று வழங்குதல் | – | 50000/– | – | |
| | | இ) கேளிக்கை அனுமதிக்கட்டணம் சர்க்கஸ், பொருட்காட்சி, கண்– காட்சி மற்றும் அனைத்து வகையான சட்டப்படியான கேளிக்கைகள் (குறைந்த பட்சக் கட்டணம் ரூ.500) | 0.50 பை | 10.00 | 1 சதுர மீட்டர் மற்றும் அதன் பாகம் | 2 திங்கள் |

**43.** அலுவலகக் குறிப்பின்படி ஒப்புக்கொள்ளப் பட்டது

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | 271 | அ) கட்டிட மனைப்பிரிவு வரைபடங்கள் கூடுதல் நகல்கள் அத்தாட்சி செய்துகொடுத்தல் | 40.00 | 100.00 | ஒரு நகல் | |
| | | ஆ) மாநகராட்சி வரைபடம்<br>பெரியது A2 size<br>சிறியது A3 size | <br>-<br>- | <br>500.00<br>200.00 | ஒரு நகல் | – |
| | | இ)அனைத்து வகையான சான்று வழங்க (சர்வே பட நகல் சர்வே ரிஜிஸ்டர் நகல் ஒவ்வொன்றிற்கு) | 50.00 | 100.00 | ஒரு நகல் | – |
| 4. | | கட்டிடப் பொருட்கள் சாலையோரம் பொது இடங்களில் தற்காலிகமாக சேமித்து வைத்தல் | 10.00 | 15.00 | 1 சதுர மீட்டர் மற்றும் அதன் பரப்பு | கட்டிட அனுமதி காலம் வரை |
| 5. | | மனைப்பிரிவு உரிமையாணைக் கட்டணம் | 750.00 | 2000.00 | 1 ஏக்கர் மற்றும் அதன் பாகம் | |
| 6. | | மனை உட்பிரிவு உரிமையாணைக் கட்டணம் மனை ஒருங்கிணைப்பு | 150.00 | 300.00 | ஒரு மனை | ஒரு தடவை |
| 7. | 259 | அனுமதிக்கப்படும் ஆட்சேபனையில்லாத ஆக்கிரமிப்புகள் | 40.00 | 60.00 | 1 ச.மீ மற்றும் அதன் பாகம் | ஒரு வருடம் |
| 8. | 259 | விழாக்கால பந்தல் உட்பட தற்காலிக ஆக்கிரமிப்புகள் | 6.00 | 10.00 | 1 ச.மீ மற்றும் அதன் பாகம் | நாள் ஒன்றுக்கு |
| 9. | | அ) சாலையின் குறுக்கே அமைக்கப்படும் ஆர்ச் | 10.00 | 100.00 | ஒவ்வொன்றிற்கும் | நாள் ஒன்றுக்கு |
| 10 | 272 | குடிசை நீங்கலாக கட்டிடங்கள் கட்டுவதற்கு எந்த தனிப்பட்ட இடத்தையும் அங்கீகரித்தல்<br>1) 400 ச.மீ. பரப்பளவு வரை<br>2) 1000 ச.மீ வரை<br>3) 1000 ச.மீ.க்கு மேல் | 75.00<br>150.00<br>300.00 | 150.00<br>300.00<br>600.00 | இடம் ஒன்றுக்கு | |
| 11. | 272 | 1) பொது தெருவின் ஓரத்தில் எல்லையிலிருந்து அல்லது எல்லை கோட்டில் எல்லை சுவர் கட்ட | 25.00 | 50.00 | 30 மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | |
| | | 2) கக்கூஸ் கட்டுவதற்கும் அல்லது திருத்தியமைப்பதற்கும்<br>அ) செப்டிக் டேங்க்<br>ஆ) கக்கூஸ் ஒரு ஆசனம்<br>இ) குளியலறை<br>ஈ) கிணறு ஆழ்துளை கிணறு கட்ட | 70.00<br>50.00<br>50.00<br>70.00 | 85.00<br>60.00<br>60.00<br>100.00 | ஒன்றுக்கு<br>ஒன்றுக்கு<br>ஒன்றுக்கு<br>ஒன்றுக்கு | |

## <u>பொது நிபந்தனைகள்</u>

1. அனுமதியின்றி நடைபெறும் கட்டுமானப் பணிகள் அனுமதி கோரி விண்ணப்பிக்கும் பொழுது உரிமையாணைக் கட்டணம் மாநகராட்சியால்

| | | | |
|---|---|---|---|
| | | நிர்ணயிக்கப்படும் அனைத்து வகையான கட்டணங்களில் 100 சதவீதம் கூடுதலாக வசூலிக்கப்படும். இது காலம் கடந்து புதுப்பிக்கப்படும் உரிமையாணைகளுக்கும் பொருந்தும்.<br><br>2. உரிமைக்காலம் முடியும் முன்னர் புதுப்பிக்கப்படும் உரிமையாணைகளுக்கு எவ்வித சலுகையுமின்றி மேலே குறிப்பிட்ட சட்ட நடைமுறையில் உள்ள கட்டணங்களே வசூலிக்கப்படும். குடிசைகளுக்கு கட்டணம் செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு உண்டு.<br><br>3. அனைத்து மனுக்களின் மீது பெறப்படும் மொத்த கட்டணத்தில்25 சதவீதம் மேற்படி மனு பரிசீலனைக்கட்டணம் என சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு பொருள் கொள்ள வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலாவது ஏதாவது ஒரு கட்டணத்தைத் திரும்ப வழங்க நேரிட்டால் 25 சதவீதம் கழித்து மீதத் தொகையை மட்டுமே திரும்ப வழங்கப்படும்.<br><br>4. அனுமதியின்றி பொது இடங்களில் கட்டிட இடிபாடுகளை கொட்டும் நபர்கள்/ வாகனங்களுக்கு அபரரதமாக கீழ்க்கண்ட விபரப்படி வசூல் செய்யப்படும்.<br>மாட்டு வண்டி ,தள்ளுவண்டி – ரூ. 500/–<br><br>மோட்டாரினால் இயக்கப்படும் வாகனங்கள் – ரூ. 1000/–<br><br>5. கையினால் இயக்கப்படும் இயந்திரங்களுக்கும் வீட்டு உபயோகத்திற்கு உபயோகப்படுத்தப்படும் மின் மோட்டார்கள் மற்றும் இயந்திரங்களுக்கு கட்டணம் பெற தேவையில்லை.<br>6. வேனல் பந்தல் ஒவ்வொன்றிற்கும் (அளவுகள் பாகுபாடின்றி) கட்டணமாக ரூ.100/– செலுத்தி மூன்று திங்களுக்கு தரையில் கால் ஊன்றாமல் பந்தல் முன் அனுமதியுடன் அமைத்து கொள்ளலாம். அனுமதியற்ற வேனல் பந்தல்களுக்கு 100 சதவீதம் அபராதக் கட்டணம் வசூல் செய்ய வேண்டும்.<br><br>7. மத, துக்க, அரசியல் பொதுக்கூட்டங்கள் போன்றவைகளுக்கு பொது இடங்களில் அமைக்கப்படும் பந்தல்களுக்கு கட்டணம் கிடையாது.<br><br>8. மேற்படி கட்டணங்களில் ஆண்டுதோறும் ஏப்ரல் முதல் நாள் முதல் 10 சதவீதம் கூடுதலாக வசூலிக்கப்படும். | |
| | 17. | தூத்துக்குடி நகராட்சி, 2008ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 27/2008) 05.08.2008 முதல் அதன் அப்போதைய எல்லைகளில் எவ்வித மாற்றமுமின்றி (51 வார்டுகள்) மாநகராட்சியாக அமைக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. அரசாணை (நிலை) எண் 7 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.01.2011ன்படி தூத்துக்குடி மாநகராட்சியுடன் அத்திமரப்பட்டி, மீளவிட்டான், முத்தையாபுரம், சங்கரப்பேரி மற்றும் தூத்துக்குடி ரூரல் ஆகிய ஊராட்சிகளை இணைத்து அரசாணை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்ட தூத்துக்குடி மாநகராட்சிக்கு மொத்தம் 60 வார்டுகள் என நிர்ணயம் செய்து அரசாணை (நிலை) எண் 89 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 28.06.2011ல் ஆணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து மாநகராட்சிக்கு தேர்தல் நடைபெற்று நான்கு மண்டலங்களாக செயல்பட்டு வருகிறது.<br>தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008 (தமிழ்நாடு சட்டம் 27/2008) 432 (12) (C) விதிகளின் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் கட்டிடம் கட்டுபவர் மற்றும் அளவர்களுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் கட்டிட வேலைகளில் தொழில்நுட்பமுள்ள கட்டிடம் கட்டுபவர்கள் மற்றும் அளவர்களையும் கட்டாயமாக நியமிக்க தேவையான கீழ்க்கண்ட உபவிதிகள் தயார் செய்யப்பட்டுள்ளது. உப விதிகளை செயல்படுத்த மாமன்றத்தின் ஒப்புதக்கு வைக்கப்படுகிறது.<br><br>உபவிதிகள் – தூத்துக்குடி மாநகராட்சி – கட்டிடம் கட்டுபவர்கள் மற்றும் அளவர்களுக்கு உரிமம் வழங்குதல்.<br>–––– | 44. அலுவலகக் குறிப்பின்படி உபவிதிகள் அனுமதிக்கப்பட்டது |

2008ம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் பிரிவு எண் 432(12) (C) (தமிழ்நாடு சட்டம் 27/2008) கீழ் தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் கட்டிடம் கட்டுபவர் மற்றும் அளவர்களுக்கு உரிமம் வழங்குதலும், கட்டிட வேலையில் தொழில்நுட்பமுள்ள கட்டிடம் கட்டுபவர்கள் மற்றும் அளவர்களையும், கட்டாயமாக நியமிக்க வேண்டியது பற்றிய உபவிதிகள்

1. புதிதாக குடிசை தவிர கட்டிடம் கட்ட, திரும்ப கட்ட, கூடுதல் அல்லது மாறுதல் செய்ய விரும்பும் ஒவ்வொரு நபரும், ஆணையாளரால் உரிமம் வழங்கப்பட்ட ஒரு தொழில் நுட்பமுள்ள, கட்டிடம் கட்டுபவர் மற்றும் அளவராக (இனிமேல் கட்டிடம் கட்டுபவர் என அழைக்கப்படும்) ஒருவரை வரைபடம் தயாரிக்கவும், கட்டிட வேலை மேற்கொள்ளவும் நியமிக்க வேண்டும்.

2. ஆணையாளரால் கட்டிட வேலைக்கு அனுமதி வழங்கப்பட்ட, கட்டிட வேலை செய்ய கட்டிடம் கட்டுபவரை நியமிக்குமுன் கட்டிடத்தை கட்டவோ, திருத்தி அமைக்கவோ, கூடுதலாகவோ அல்லது மாறுதலாக கட்டும் வேலை ஆரம்பிக்கக்கூடாது.

3. 2008ம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம்27/2008) இனிமேல் 'சட்டம்' என்ற சொல்லப்படும் அல்லது எந்த விதி, உபவிதி ஒழுங்குமுறை அல்லது உத்திரவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படும், ஒவ்வொரு வரைபடமும், உரிமையாணை பெற்ற கட்டிடம் கட்டுபவரால், தயாரிக்கப்பட்டு, அத்தாட்சி செய்து கையொப்பமிடப்பட்டும், உரிமையாளர் அல்லது வரைபடம் சமர்ப்பிக்கும் மற்ற நபர்கள் கையொப்பமிடப்பட்டிருந்தாலன்றி ஆணையாளரால், ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது. அரசுத்துறை கட்டிடங்கள் சம்பந்தப்பட்டமட்டில், அவற்றின் வரைபடங்கள் தமிழ்நாடு அரசு பொதுப் பணித்துறை உதவிப் பொறியாளர் நிலைக்கு குறையாத ஒரு நபரின் அத்தாட்சியுடன் கையொப்பமிடப்பட வேண்டும்.

4. (அ) வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள அனுமதி பெற்ற கட்டிடம் கட்டுபவர் அதன் உரிமையாளர் அல்லது சம்பந்தப்பட்ட நபர்களால் கட்டிட வேலை முடியும் வரை மேற்படி எல்லா வேலைகளையும், செய்வதற்கு நியமிக்கப்பட்டவராக கருதப்படுவார்.

ஆ) அனுமதிக்கப்பட்ட கட்டிட வேலை துவங்குமுன்போ, அல்லது நடந்து கொண்டிருக்கும் பொழுதோ, உரிமையாளர் அல்லது சம்பந்தப்பட்ட நபர்களால் நியமிக்கப்பட்ட உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவர் நீக்கப்படுவாராயின் அதை உரிமையாளர் மற்றும் உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவர் இருவருமே ஆணையாளருக்கு தெரிவிக்க வேண்டும்.

இ) அங்கீகரிக்கப்பட்ட வேலைகள் ஏதாகிலும், முடிக்கப்பட வேண்டியதாயிருக்கும் பொழுது அவ்வாறான நிலை ஏற்படின் மற்றொரு உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவரை உரிமையாளர் அல்லது அவருடைய நபர்களால் நியமனம் செய்யப்பட்டு அவ்விதம் நியமனம் செய்ததை ஏழு நாட்களுக்கு ஆணையாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

5) அனுமதி பெற்ற கட்டிடம் கட்டுபவராக பணியாற்ற விழையும், நபர் ஒவ்வொருவரும் ஆணையாளரால், நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அத்துடன் இந்த உபவிதிகளின் அனுபந்தம் 1ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள உரிமையாணைத் தொகை எந்த வருடத்திற்கு அனுமதி கோரப்படுகிறதோ அந்த வருடத்திற்குண்டான தொகையும், எச்சரிக்கை வைப்புத் தொகையாக ரூபாய் 5000 மட்டும் செலுத்த வேண்டும்.

6) (1) உபவிதி 5ல் வரையறுக்கப்பட்ட எச்சரிக்கை வைப்புத் தொகையும், உரிமம் கட்டணமும் கட்டாத எவரும்,

6 (2) குறைந்தபட்சம் இந்த உபவிதிகளின் அனுபந்தம் 1ல் கண்ட யோக்கிய தரம்சங்களும், அனுபவமும் இல்லாத நபரும் உரிமம் பெற்ற கட்டிடம் கட்டுபவராக ஆணையாளரால் அனுமதி அளிக்கப்படமாட்டார்.

7) ஆணையார் தனது உசிதம் போல் உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவருக்கான தரத்தை நிர்ணயித்து உரிமம் வழங்கலாம் அல்லது உரிமம் வழங்க மறுக்கலாம். அவ்வாறாயின், உரிமம் கட்டணமும் எச்சரிக்கை வைப்புத் தொகையும் மனுதாருக்கு திருப்பி தரப்பட வேண்டும்.

8) உபவிதி 7ல் கண்ட ஆணையாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.

9) இந்த உபவிதிகளின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு உரிமமும், அனுபந்தம் 2ல் குறிப்பிட்ட படிவத்தில் இருப்பதுடன், ஆணையாளரால், கையொப்பமிடப்பட வேண்டும். உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவர் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளையும் உரிமம் எவ்வளவு காலத்திற்கு அளிக்கப்படுகிறது என்பதையும் அதில் குறிப்பிட வேண்டும். உரிமம் படிவத்தில் கண்டுள்ள நிபந்தனைகளை அவ்வப்போது ஆணையாளர் மாற்றலாம்.

10) உரிமம் புதுப்பிக்கக் கோரும் விண்ணப்பம் எந்த ஆண்டுக்கு புதுப்பிக்கப்பட வேண்டுமோ, அந்த ஆண்டிற்குண்டான உரிமக் கட்டணத்துடன் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

11) உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவர்களின் பதிவேடு ஒன்று ஆணையாளரால் பராமரிக்கப்பட வேண்டும். மேலும் உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவர்களின் முகவரியுடனும், எவ்வளவு காலத்திற்கு அவர்களுடைய உரிமம் செல்லத்தக்கது என்பது குறித்த பட்டியல் நாளது தேதி வரை தயாரிக்கப்பட்டு மாநகராட்சியில் அலுவலக நேரத்தில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். எந்த ஒரு உரிமையாளர் அல்லது நபர் சொந்த முகவரியுடன் தபால் வில்லைகள் இணைந்த உறையுடன் விண்ணப்பித்தால் மேற்படி பட்டியலின் நகல் ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும்.

12) ஒவ்வொரு உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவரும், வரைபடங்கள் தயாரிக்கும் போது மாநகராட்சியின் அவ்வப்போது அமுலில் உள்ள சட்ட திட்டங்களுக்கு உபவிதிகளுக்கும், உட்பட்டு இருக்க வேண்டும். மேலும் அவ்வித விதிகளுக்குட்பட்ட தேவையான அளவுகளும், விபரங்களும், அந்த வரைபடம் சம்பந்தப்பட்ட மட்டில் அளிக்க வேண்டும்.

13) ஒவ்வொரு உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவரும், தன்னால் தயாரிக்கப்படும், வரைபடத்தில் சரியான விபரங்களும், அளவுகளும், கொடுப்பதுடன், தாம் நியமிக்கப்பட்ட வேலை, கட்டிடம் அல்லது வரைபடம் சம்பந்தமான சரியான விபரங்கள் அளிக்க வேண்டும். உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவர் கட்டிடத்தின் உறுதித் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன், அதனுடைய விபரமான மாதிரியை ஆணையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

14) ஒவ்வொரு உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவரும், கட்டிட வேலையைப் பொறுத்தமட்டில், அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின்படியும், அல்லது விரிவான விபரக் குறிப்பின்படியும், மாநகராட்சியில் அமுலில் இருக்கும் விதிமுறைகளுக்கொப்பவும் முழு அளவில் இண்ங்குதலுக்குட்பட்டிருக்கிறதா என்பதைச் சரிபார்க்க வேண்டும்.

15) எந்த உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவராவது தனக்கு அளிக்கப்பட்ட உரிமத்தில் கண்ட நிபந்தனைகள் அல்லது உபவிதிகளுக்கு மாறாக நடந்தால், ஆணையாளரால் உரிமம் ரத்து செய்யப்படலாம் அல்லது 5000 ரூபாய்க்கு மேல் போகாமல் அபராதம் விதிக்கப்படலாம்.

| | | |
|---|---|---|
| | 16) உரிமை காலாவதியாகும் போது எச்சரிக்கை வைப்புத் தொகை ஆணையாளரால், உரிமம் பெற்றவருக்கு திருப்பி அளிக்கத்தக்கதாகும். ஆணையாளரால் உரிமம் ரத்து செய்யப்பட்டாலோ அல்லது உபவிதி 15ல் கண்டபடி அபராத விதிப்புக்கு ஆளாகும் போதோ, அபராதத் தொகை அல்லது அந்த உரிமம் பெற்றவரின் செயலால் மாநகராட்சிக்கு ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டிருந்தால், அதற்கான ஆகியவற்றை எச்சரிக்கை வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து கொண்டு பின்னர் மீதம் இருந்தால், உரிமம் பெற்றவருக்கு திருப்பி தரலாம். உரிமம் ரத்து செய்யப்பட்டால், உரிமக் கட்டணம் திருப்பித் தரப்பட மாட்டாது.<br><br>17) ஒவ்வொரு உரிமம் பெற்ற கட்டிடம் கட்டுபவர் தன்னுடைய உரிமம் ரத்து செய்யப்பட்டால், அவ்வாறு ரத்து செய்யப்பட்ட உத்திரவைப் பெற்றுக் கொண்ட ஏழு தினங்களுக்குள் ஆணையாளருக்கு திருப்பி அனுப்ப வேண்டும். தவறினால் உரிமம் திருப்பி தரும்வரை எச்சரிக்கை வைப்புத் தொகை திருப்பி தருவதை ஆணையாளர் நிறுத்தி வைக்கலாம். மேலும் அந்த உரிமம் பதினைந்து நாட்களில் திருப்பி அனுப்பாவிடில் மாநகராட்சி மன்றத்தால், எச்சரிக்கை வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்பட்டதாக கருதப்படும்.<br><br>18) மாநகராடசியினால் முறைப்படி அனுமதிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் இதர வேலைகள் செய்ய அல்லது மேற்பார்வையிட எந்த ஒரு சுவான்தார் அல்லது உரிமம் பெற்ற கட்டிடம் கட்டுபவர் நியமனம் செய்யப்படலாம். ஆனால் மாநகராட்சி கவுன்சில் அல்லது ஆணையாளரால் அனுமதிக்கப்படாத எந்த வேலையையும் அவர் மேற்கொள்ளக்கூடாது.<br><br>19) ஒவ்வொரு உரிமம் பெற்ற கட்டிடம் கட்டுபவர் தான் நியமிக்கப்பட்ட அல்லது அமர்த்தப்பட்ட வேலைக்கு அல்லது வரைபடங்கள் தயாரிப்பதற்கு அவ்வாறு நியமிக்கும் உரிமையாள்ா அல்லது வேறு நபரிடமிருந்து ஆணையாளரால், அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விகிதம் அல்லது விதிகங்களுக்கு மேல் போகாமல் நியாயமான கட்டணம் கோரிப் பெற உரிமையுடையவராவார்.<br><br>**<u>உரிமம் நிபந்தனைகள்</u>**<br><br>1. ஆணையாளரால் உத்திரவிடப்பட்டு தெரிவிக்கப்படும் உத்திரவுகளை அனுமதி பெற்ற கட்டிடம் கட்டுபவர் அவர் நியமிக்கப்படும் அல்லது ஏற்றுக் கொள்ளும் வேலைகளில் எல்லா விஷயங்களிலும் திருப்தி செய்வது அன்னாருடைய கடமை.<br><br>மேலும் கட்டிடத்திற்கான இடம் அல்லது இடங்கள் மற்றும் தெருக்களில் அளவுகள் வரைப்படம் அல்லது லே அவுட் வரைபடங்களில் சரியாக குறிக்கப்பட்டிருக்கின்றவா, என்பதையும், நில அளவு எல்கைள், சரியாக இருக்கின்றவா என்றும் எந்த தெருவிலும், மாநகராட்சி மற்றும் அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்பதையும் சரிபார்த்து திருப்தி அடைய வேண்டும்.<br><br>2. கட்டிடம் கட்ட திருப்பி கட்ட அல்லது மாற்றி அமைக்க அல்லது கட்டிடத்திற்கு கூடுதலாக கட்ட ஒவ்வொரு வரைபடம் தயாரிக்கும் பொழுது அந்த கட்டிடத்திற்குப் பொருந்தும், கட்டிட விதிகள், மற்றும் திட்ட விதிகளை திருப்தி செய்வதுடன் (ஏற்கனவே இடத்தில் உள்ள கட்டிடம் அல்லது கட்டிடங்கள் மற்றும் இதர விபரங்களை காட்டும் வரைபடம் தேவைப்படும் அளவுக்கு தயாரித்து இணைக்கப்படவேண்டும்) ஏற்கனவே உள்ள கட்டிடத்திற்கும், உத்தேச வேலையும், அஸ்திவாரத்தின் அமைப்பு, தளங்கள், மற்றும் கூரைகள், சுவர்கள், கட்டிடத்தின் மற்ற பாகங்கள், நிலத்தின் மண் மற்றும் உப மண்ணின் அமைப்பு, அஸ்திவாரம் மற்றும் கட்டிடத்தின் இதர பாகங்களின் உறுதி தன்மை மற்றும் பாதுகாப்பு எப்படி அமைப்பது என்பதை நிச்சயித்து அது சம்பந்தமாக ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.<br><br>3. ஆணையாளர் மற்றும் ஆணையாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர்கள் 2008ம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின் அமைப்பு, விதிகள், உபவிதிகள், சட்ட திட்டங்கள் அவ்வப்போது அமுலில் இருக்கும் நியாயமான தேவைகளுக்கும், அனுமதி பெற்ற கட்டிடம் கட்டுபவர் உதவுவதுடன் ஒத்துழைப்பு தர | |

வேண்டும்.

4. அனுமதி பெற்ற வரைவாளர் தான் அனுமதி பெற்ற வரைவாளராக இருக்கும் காலத்தில் பொது நலனுக்கு விரோதமாகவோ அல்லது அவர் அனுமதிக்கப்பட்ட வாரியத்திற்கு விரோதமாகவோ அல்லது சட்டத்தின் அமைப்புகள், விதிகள் உபவிதிகள், சட்ட திட்டங்கள், அவ்வப்போது அமுலிலிருக்கும் நியாயமான தேவைகளை தவிர்க்கவோ, அல்லது தவிர்க்கும் முயற்சிக்கோ அவர் துணையாக இருக்கக் கூடாது. மேலும் அவரை நியமனம் செய்த அல்லது ஈடுபடுத்தப்பட்ட நபர் அவ்வாது செய்யும் நோக்கமுடையவராக இருந்தால், அதை உடனடியாக ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும்.

5. உரிமம் பெற்ற வரைவாளர் ஒரு வருடத்திற்கு குறைந்தது 10 கட்டிட விண்ணப்பங்களாவது சமர்ப்பிக்கப்பட வேண்டும். தவறினால் பின்னர் வரும் ஆண்டுகளில் உரிமம் புதுப்பித்து கால நீடிப்பு செய்து உத்திரவு வழங்கப்படமாட்டாது.

6. உரிமம் புதுப்பித்தல் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டிலும் பிப்ரவரி மாத இறுதிக்குள் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**அனுபந்தம் – 1**

| தரம் | தததி | வேலையின் தரம் | உரிமம் கட்டணம் |
|---|---|---|---|
| உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவர் கிரேடு–1 | 1. பி.இ.(சிவில்)ஏ.எம்.ஐ.இ. பி.ஆர்க். கட்டிடம் கட்டும் வேலையில் மற்றும் டிசைன் தயாரிப்பதில் குறைந்தபட்சம் 5 வருடம் அனுபவம் இருக்க வேண்டும்.<br>அல்லது<br>டிசிஇ, டி.ஆர்க் கட்டிடம் கட்டும் வேலையில் மற்றும் டிசைன் தயாரிப்பதில் 10 வருட அனுபவம் இருக்க வேண்டும் | கோர்த்திணைக்கும் (Framed Structure) கட்டிடங்கள் மற்றும் பலமாடி கட்டிடங்கள் தவிர ரூபாய் ஒரு கோடிக்கு மேல் போகும் எல்லா வீடுகள் மற்றும் மாடிக் கட்டிட வேலைகள் | ரூ. 4000/– |
| | 2. பி.இ.,(சிவில்)/ஏ.எம்.ஐ.ஈ., பி.ஆர்க்/ குறைந்த பட்சம் 10 வருட அனுபவம் அதில் இரண்டு வருடம் கோர்த்து இணைக்கும் கட்டிட வேலையில் அனுபவம் இருக்க் வேண்டும் | கோர்த்திணைப்பு கட்டிடங்கள் மற்றும் பலமாடிக் கட்டிடம் உள்பட எல்லா கட்டிட வேலைகளும் | 4000/– |
| உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவர் கிரேடு–2 | 1. பி.இ.,(சிவில்)/ ஏ.எம்.ஐ.இ., பி.ஆர்க்/ கட்டிடம் கட்டும் வேலையில் குறைந்த பட்சம் ஒரு வருட அனுபவம்<br>2. எல்.சி.ஈ./டி.சி.இ., டி.ஆர்க் கட்டிடம் கட்டும் வேலையில் மூன்று வருட அனுபவம். | ரூ.50 லட்சம் மதிப்பீட்டிலான எல்லா கட்டிட வேலைகளும் | 3000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| உரிமை பெற்ற கட்டிடம் கட்டுபவர் கிரேடு–3 | 1. தகுதி பெற்ற வரைவாளர் (I.I.T. Draftsman) பொறியாளர் இடம் 5 வருடம் அனுபவம்<br>2. டி.சி.இ / டி.ஆர்க். | ஏற்கனவே உள்ள கட்டிடங்கள் கூடுதலாகவோ அல்லது மாற்றி அமைக்கவோ அல்லது உயர்ந்த பட்சம் ரூ.30 இலட்சம் மதிப்பீடு கொண்ட மெட்ராஸ் டெரஸ் ஆர்.சி.சி புதிய கட்டிடங்கள் கட்ட | 2000/– | |

**<u>அனுபந்தம் – 2</u>**

**<u>அனுமதி பெற்ற கட்டிடம் கட்டுபவருக்கான உரிமம் நமுனா</u>**

2008ம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 432 (12) (சி) விதியின் கீழ்

தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 433, 432 (12) (சி) விதியின் பிரகாரம், தூத்துக்குடி மாநகராட்சியால் செய்யப்பட்ட உபவிதிகளின் கீழ், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் ............... ..... ................................. ....... வசிக்கும் திரு ........ ..... ...................................... ஐ ........ ..... ...........முதல் ........ ..... ................. வரை ஒரு வருட காலத்திற்கு அனுமதி பெற்ற கட்டிடம் கட்டுபவர் மற்றும் அளவராக அனுமதிக்கப்படுகிறார்.

இந்த உரிமம் எந்த நபருக்கும் மாற்றக்கூடியது அல்ல. மேலும் ஆணையாளர் அவ்வப்போது கேட்கப்படும் போது, உரிமம் பெற்றவர் அதை தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த அனுமதி பெற்றவர் தான் நியமிக்கப்படும் அல்லது ஏற்றுக் கொள்ளப்படும் சுவான்தார் அல்லது மற்ற நபர்களிடம் தான் தயாரித்த வரைபடம் அல்லது மற்ற வேலைகளுக்கு உபவிதி 19ன் கீழ் ஆணையாளரால் அவ்வப்போது, நிர்ணயிக்கும் கட்டணம் அல்லது கட்டணங்களுக்கு மேல் போகாமல் நியாயமான கட்டணம் அல்லது கட்டணங்கள் பெறத் தகுதியுடையவராவார்.

அனுமதி பெற்றவர் இத்துடன் இணைக்கப்பட்ட எல்லா நிபந்தனைகளுக்கும் கட்டுப்படவராவார்.

ஏதாவது நிபந்தனைகளுக்கு கட்டுப்படவோ, அல்லது திருப்தி செய்யவோ, அனுமதி பெற்றவர் தவறினால் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன், அபராதமும் விதிக்கப்படும். அத்துடன் ஏதாவது செய்யவோ, அல்லது விடுதலினால், மாநகராட்சி ஏற்படும் நஷ்டத்தை அன்னாருடைய பிணை வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும். அது மேலும் தேவையான தண்டனைக்கும் சிவில் பொறுப்புக்கும் சம்பந்தப்பட வேண்டியிருக்கும்.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:**

தூத்துக்குடி மாநகராட்சியில் கட்டிட படவரைவாளருக்கான உப விதிகளை செயல்படுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்

எப்1/705/12

| | | | |
|---|---|---|---|
| | 18. | இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட கீழரதவீதி திருமண மண்டபத்தை திரு ஒய்.அகமது வரிசை என்பவர் 2009–10 முதல் 2011–12 வரை உரிமம் பெற்று நடத்தி வருகிறார். மேற்படி இனத்திற்கான உரிம காலம் 31.03.2012ல் முடிவு பெறுவதால் அரசாணை எண் 92 நாள் 31.03.2007ன்படி கடந்த ஆண்டு குத்தகையை விட 15 சதவீதம் உயர்வு செய்து அதன் உரிம காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீடித்து வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். | 45. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | எனவே கடந்த ஆண்டு உரிமத் தொகையான ரூ.45150/—இல் 15 சதவீதத் தொகை ரூ.6773/— சேர்த்து மொத்தம் ரூ.51923/— (வருடத்திற்கு) செலுத்தவும் அன்னாருக்கு மேற்படி உரிமத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீடித்து (2012—2013 முதல் 2014—2015 வரை) மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் அனுமதிக்கலாம்<br><br>அ16/29659/2008 | |
| | 19. | தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியான லூர்தம்மாள்புரத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடத்தில் நகர சுகாதார மையம் அமைப்பதற்கு துணை இயக்குநர், சுகாதார பணிகள் அவர்களின் கடித எண் 10364/அ4/2011 நாள் 07.12.2011ல் வாடகை இல்லாமல் செயல்பட அனுமதி கோரி பார்வையில் கண்ட கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் மாநகராட்சிக்கு சொந்தமானது இதனை அரசு மற்றும் தனியார் யாருக்கும் வாடகை இல்லாமல் கொடுக்க முடியாது. மேற்படி கட்டிடத்திற்கு பொதுப்பணித்துறையின் நியாய வாடகை அடிப்படையில் மாத வாடகையாக ரூ.7593/— நிர்ணயம் செய்யலாம்.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**:<br><br>1) மாத வாடகையாக ரூ.7593/— நிர்ணயம் செய்ய அனுமதிக்கலாம்.<br>2) துணை இயக்குநர், சுகாதார பணிகள் தூத்துக்குடி அவர்களை 01.02.2012 வாடகை செலுத்த அறிவுறுத்தலாம்.<br><br>இ1/03482/2012 | 46. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 20. | தூத்துக்குடி மாநகராட்சியானது 25.10.2011 முதல் முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, மீளவிட்டான், சங்கரப்பேரி, தூத்துக்குடி ரூரல் ஆகிய 5 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கி மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தற்போது மேற்கண்ட 5 பஞ்சாயத்துகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் சீரான முறையில் இல்லாததால் பஞ்சாயத்து பகுதி பொதுமக்கள் சீரான குடிநீர் வேண்டி போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.<br><br>தற்போது தூத்துக்குடி மாநகராட்சிக்கு 4வது குடிநீர் குழாய் திட்டம் அமைப்பதற்கு அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட 5 பஞ்சாயத்துகளின் பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு அவர்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் வல்லநாடு தாமிரபரணி ஆற்றுபடுகையில் புதியதாக நீர் சேகரிப்பு கிணறு அமைத்து அதன் மூலம் சுமார் 5000 LPM குடிநீர் பம்பிங் செய்து தற்போது இயக்கப்படாமல் உள்ள இரண்டாவது பைப் லைன் 400 எம்.எம் CI குழாய் மூலம் வல்லநாடு தெப்பத்தில் குடிநீர் தேக்கி 600 எம்எம் RCC குழாய் மூலம் தூத்துக்குடி மாநகர்க்கு கூடுதலாக குடிநீர் கொண்டு வந்து தற்காலிக தீர்வு காண தயார் செய்யப்பட்ட பின்வரும் பட்டியலில் கண்டுள்ள திருத்திய மதிப்பீடு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>மேலும், அரசாணை எண் 36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 10.02.2012ல் மேற்படி திட்டத்திற்கான செலவினம் உள்கட்டமைப்பு நிதியிலிருந்து பணிகளை மேற்கொள்ளவும் அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி 654 லட்சங்கள் ஆகும் என்று 24.01.2012ம் தேதியன்று அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | 47. 1) அலுவலகக் குறிப்பு எண் 1 அங்கீகரிக்கப்பட்டது.<br>2) அலுவலகக் குறிப்பு எண் 2, 3 மற்றும் 4 குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1. | தாமிரபரணி ஆற்றுப்படுகையில் நீர்சேகரிப்பு கிணறு மற்றும் நடைபாலம் அமைத்தல் | 144.00 |
| 2. | நீர்சேகரிப்பு கிணற்றுக்கு தேவையான பம்ப் மற்றும் மின் மோட்டார் பொருத்தும் பணி | 60.00 |
| 3. | நீர் சேகரிப்பு கிணறு பகுதியில் புதிய 315 KVA மின்மாற்றி அமைத்து மின் இணைப்பு பெறுதல் | 39.00 |
| 4. | நீர்சேகரிப்பு கிணறு பகுதியில் புதிய 320 KVA ஜெனரேட்டர் அமைத்தல் | 33.00 |
| 5. | நீர் சேகரிப்பு கிணற்றில் இருந்து வல்லநாடு தெப்பம் வரை 400 மி.மீ. விட்டம் இரும்பு குழாய் பதிக்கும் பணி (Ductile Joint) | 255.00 |
| 6. | வாகைகுளம் மற்றும் புதுக்கோட்டை பகுதியில் சேதமடைந்த 600 எம்எம் RCC குழாய்களுக்குப் பதில் புதிய 600 மி.மீ. விட்டம் இரும்பு குழாய் பதிக்கும் பணி | 195.00 |
| | மொத்தம் | 726.00 |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1) 5 பஞ்சாயத்துக்களின் பொதுமக்களின் நலன் கருதி வல்லநாடு தாமிரபரணி ஆற்றுப்படுகையில் புதிய நீர் சேகரிப்பு கிணறு அமைக்க தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீடு அங்கீகரிக்கலாம்.
2) பட்டியலில் கண்டுள்ள வரிசை எண் 2 முதல் 4 வரை உள்ள திருத்திய மதிப்பீடு தொகையினை மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) வரிசை எண் 1, 5 மற்றும் 6 வரை உள்ள திருத்திய மதிப்பீடு தொகைக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் நிர்வாக அனுமதி பெறலாம்.
4) மேற்படி திட்டத்திற்கான செலவினம் உள்கட்டமைப்பு நிதியிலிருந்து மான்யமாக ரூ.654.00 லட்சங்கள் அரசாணை எண் 36 ந.நி.ம.கு.வழங்கல் துறை நாள் 10.02.2012ன்படி செயல்படுத்தலாம். மேலும் கூடுதல் செலவினம் மாநகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ3/00462/2012

21. இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஈடு செய்யும் நிதி திட்டம் 2011–12 (Operation and maintanee Gap Filling Fund 2011-2012) ல் தூத்துக்குடி மாநகராட்சிக்கு ரூ.45 லட்சம் அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் செய்ய இம்மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

48. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | வேலையின் பெயர் | திட்ட மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான வல்லநாடு தலைமை நீர் பணியிடத்தில் நீர் உறிஞ்சும் கிணறு எண் I மற்றும் IIல் புதிதாக 35 கு.வே மற்றும் 40கு.வே மின்மோட்டார் பம்ப் விநியோகம் செய்து பொருத்தும் பணி | 22.00 |
| 2. | இம்மாநகராட்சி வல்லநாடு தலைமை நீர் பணியிடம் புதிய திட்டத்திலுள்ள 170 கு.வே மின்மோட்டார் அறையில் ஓர் புதிய 170 கு.வே. மின் மோட்டார் மற்றும் பம்ப் விநியோகம் செய்து பொருத்திடும் பணி | 12.00 |
| 3. | இம்மாநகராட்சி, வல்லநாடு தலைமை நீர் பணியிடம் பழைய திட்டத்திலுள்ள மிகப் பழமையான 175 கு.வே. மின் மோட்டாருக்கு பதிலாக ஓர் 175 கு.வே புதிய மின்மோட்டார் விநியோகம் செய்து பொருத்திடும் பணி | 6.00 |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>4.</td><td>இம்மாநகராட்சி, இராஜாஜி பூங்கா நீர் உந்து நிலையத்திலிருந்து கலைஞர் நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றும் 40கு.வே மின்மோட்டார் மற்றும் பம்ப்க்கு மாற்று மின் மோட்டார் மற்றும் பம்ப் புதிதாக வாங்கி பொருத்தி இது தொடர்பான பணிகள் செய்து இயக்கித் தரும் பணி</td><td>7.00</td></tr>
<tr><td></td><td>ஆக மொத்தம்</td><td>47.00</td></tr>
</table>
மேற்கண்ட பணிக்கான கூடுதல் செலவினம் ரூ.2.00 லட்சம் இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் இம்மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<u>அலுவலகக் குறிப்பு</u>: அனுமதிக்கலாம்.<br><br>
மா.க.எண் 04779/இ3/12
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>22.</td>
<td>தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பக்கிள் ஓடை பணியில் இடையூறாக அண்ணாநகர் 6, 7, 8வது தெருப் பகுதியிலுள்ள குடிநீர் குழாயை உடனே மாற்றியமைக்க வேண்டி ரூ.528652/– செலவு செய்ததை மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>
<u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>
ம.ப.எண் 216/11–12</td>
<td>49. அலுவலகக் குறிப்பின்படி பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>23.</td>
<td>வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகருக்கு குடிநீர் வரும் 600மி.மீ (ஆர்.சி.சி) தன்னோட்டக்குழாய் வாகைக்குளம் மேற்கு பகுதியில் உடைப்பு ஏற்பட்டதை உடனே சரி செய்ய ரூ.103887/– செலவு செய்ததை மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>
<u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் பதிவு செய்து கொள்ளலாம்.<br>
ம.ப.எண் 293/11–12</td>
<td>50. அலுவலகக் குறிப்பின்படி பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>24.</td>
<td>இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் மற்றும் வல்லநாடு தெப்பம் பகுதியில் உள்ள குடிநீர் பணியாளர்களின் குடியிருப்புகள் மிகவும் சேதமடைந்த நிலையில் பயன்பாட்டில் இல்லாமல் இருப்பதால், வல்லநாடு தலைமை நீரேற்றுநிலையத்தில் இரண்டு குடியிருப்பும் (Block) மற்றும் வல்லநாடு தெப்பம் பகுதியில் ஒரு குடியிருப்பும் (Block) கட்டுவதற்கு 2011–12ம் ஆண்டு விலைப்புள்ளிப்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.1820000/–க்கு மாமன்றத்திற்கு பொருள் வைத்து அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<u>அலுவலகக் குறிப்பு</u>: மதிப்பீடு தொகையை அங்கீகரிக்கலாம். மேலும் மேற்கண்ட செலவினம் குடிநீர் கட்டணம் டேவணித்தொகை நிதியிலிருந்து செலவு செய்யவும் அனுமதிக்கலாம். (மொத்தம் 6 குடியிருப்புகள்)<br>
ம.ப.எண். 15/2011–12</td>
<td>51. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>25.</td>
<td>தூத்துக்குடி மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வாகனங்களுக்கு 2012–13ம் ஆண்டிற்கு (01.04.2012 முதல் 31.03.2013 வரை) வாகனவரி, பசுமை வரி, பாதுகாப்பு வரி, சர்வீஸ் கட்டணம், புகைச் சான்று கட்டணம், மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் பதிவு சான்று கட்டணம் மற்றும் காப்பீட்டு சான்று புதுப்பித்தல் கட்டணம் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு செலுத்தவும் அது வகைக்கு ஆகும் உத்தேச செலவு ரூ.500000/– (ரூபாய் ஐந்து லட்சம்)யில் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<u>குறிப்பு</u>: மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
இ6/04069/2012</td>
<td>52. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>26.</td>
<td>இம்மாநகராட்சிக்கு சொந்தமான பாளையங்கோட்டை சாலையில் வடபுறம் அமைந்துள்ள பூங்காவில் உடற்பயிற்சி நிலையம் மற்றும் விலையாட்டு உபகரணங்கள் அமைக்கும் பணிக்கு இம்மாமன்ற தீர்மான எண் 497 நாள் 29.12.2011 அன்று அனுமதி வழங்கியதன் பேரில் இப்பணிக்கு 27.01.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி</td>
<td>53. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | வரவேற்கப்பட்டது. இதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள்,<br><br>1. திரு எஸ்.சுதர்சன், தூத்துக்குடி — மதிப்பீட்டிற்கு 7.12% அதிகம் — டேவணித்தொகை செலுத்தியுள்ளார்<br><br>2. திரு எஸ்.ரம்போலா தூத்துக்குடி — மதிப்பீட்டிற்கு 4.88% அதிகம் — டேவணித்தொகை செலுத்தியுள்ளார்<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதால் ஒப்பந்தாரரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தகாரர் திரு எஸ்.ரம்போலா, தூத்துக்குடி அவர்கள் மதிப்பீட்டை விட 0.01% குறைவு ரூ.1877102.80க்கு விலைகுறைவு கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண் 199/11–12 | |
| | 27. இம்மாநகராட்சிக்கு சொந்தமான பாளையங்கோட்டை சாலையில் வடபுறம் அமைந்துள்ள பூங்காவில் நடைபாதை மற்றும் பராமரிப்பு பணிக்கு இம்மாமன்ற தீர்மான எண் 496 நாள் 29.12.2011 அன்று அனுமதி வழங்கியதன் பேரில் இப்பணிக்கு 27.01.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டது. இதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள்,<br><br>1. திரு எஸ்.சுதர்சன், தூத்துக்குடி — மதிப்பீட்டிற்கு 5.04% அதிகம் — டேவணித்தொகை செலுத்தியுள்ளார்<br><br>2. திரு எஸ்.ரம்போலா தூத்துக்குடி — மதிப்பீட்டிற்கு 4.09% அதிகம் — டேவணித்தொகை செலுத்தியுள்ளார்<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதால் ஒப்பந்தாரரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தகாரர் திரு எஸ்.ரம்போலா, தூத்துக்குடி அவர்கள் மதிப்பீட்டை விட 0.02% குறைவு ரூ.1981460.05க்கு விலைகுறைவு கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண் 198/11–12 | 54. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>28.</td><td>தூத்துக்குடி மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் தெருவிளக்கு பராமரிப்பு பணி மூன்று ஆண்டுகள் செய்வதற்கு 10.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதனுடைய தொழில்நுட்ப விபரங்கள் சரியாக இருந்ததால் Price bit 17.02.2012 அன்று திறக்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் கிடைக்கப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு.<br><br>1) மாலானி லைட்டிங் கம்பெனி, திருநெல்வேலி<br>ரூ. 330/– Tube Light/ each Polerate<br>ரூ. 3400/– 250W Sodium light / each polerate<br>ரூ. 4000/– Highmast / 1 No. MHL<br><br>2) வில்ஸ் எலக்ட்ரிக்கல்ஸ், தூத்துக்குடி – ரூ. 315/ Tube Light/ each Polerate<br>ரூ. 1590/– 250W Sodium light / each polerate<br>ரூ. 1365/– Highmast / 1 No. MHL<br><br>3) சுதா என்ஜினியரிங், தூத்துக்குடி – ரூ. 325/ Tube Light/ each Polerate<br>ரூ. 1635/– 250W Sodium light / each polerate<br>ரூ. 1395/– Highmast / 1 No. MHL<br><br>அதில் வில்ஸ் எலக்ட்ரிக்கல்ஸ் தூத்துக்குடி குறைந்த விலைவிகிதம் கொடுத்து இருந்தனர். அவர்களிடம் Negotioation கோரப்பட்டதில் கீழ்க்கண்டடாறு Negotiation rate கொடுத்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு<br><br>ரூ.313/Tube light / each Pole rate<br>ரூ. 1585/ Sodium light / Each Pole rate<br>ரூ. 1360/ High mast / 1 No. MHL<br><br>பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் வில்ஸ் எலக்ட்ரிக்கல்ஸ், தூத்துக்குடி விலைப்புள்ளி நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக விலை விகிதத்தை விட குறைவாகவும் மற்றும் 3 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ளதாலும் மேற்படி விலைப்புள்ளியை அங்கீகாரம் செய்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. முதலில் ஓராண்டு கால பராமரிப்புக்கு விடவும் அதன்பின்னர் 2 வருடங்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை அதனை தேவைப்படின் நீட்டித்துக் கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/11609/11</td><td>55. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>29.</td><td>இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட சேதுபாதை ரோடு மயானத்தின் பனைமரங்களின் மகசூலை அனுபவிக்கும் உரிமம் பெற்ற திரு கே.பாஸ்கர், வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் பனை மரங்களின் மகசூலை அனுபவிக்கும் உரிமம் பெற்ற திரு நயினார் மற்றும் வல்லநாடு தணைமை நீரேற்று நிலையத்தில் பனைமரங்கள் தவிர இதர மங்களின் மகசூலை அனுபவிக்கும் உரிமம் பெற்ற திரு சங்கரன் ஆகியோர் (2009–2010 முதல் 2011–2012 வரை) உரிமம் பெற்று நடத்து வருகின்றனர். அதன் உரிம காலம் 31.03.2012ல் முடிவு பெறுவதால் மேலும் 3 ஆண்டுகளுக்கு குத்தகையை தொடர்ந்து நடத்த ஏற்கனவே உள்ள குத்தகையை விட 15 சதவிதம் உயர்வு செய்து அரசாணை எண் 92 நாள் 31.03.2007ன்படி கடந்த ஆண்டு குத்தகையை விட 15 சதவிதம் உயர்வு செய்து அதன் உரிம காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீடித்து வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார்கள்.<br><table><tr><td>வ. எண்</td><td>ஏல இனம்</td><td>உரிமைதாரர் பெயர் மற்றும் முகவரி</td><td>2011–2012 ஆண்டு ஏலத்தெ</td><td>15% உயர்வு தொகை</td><td>2012–2013ம் ஆண்டு நிர்ணயம்</td></tr></table></td><td>56. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | ாகை | | செய்ய வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட சேதுபாதை ரோடு மயானத்தின் பனைமரங்களின் மகசூலை அனுபவிக்கும் உரிமம் (2009–2010 முதல் 2011–12 வரை) | திரு கே.பாஸ்கர் 1, பொன்னகரம், தூத்துக்குடி | 8610/– | 1292/– | 9902/– |
| 2. | வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பனைமரங்களின் மகசூலை அனுபவிக்கும் உரிமம் (2009–2010 முதல் 2011–12 வரை) | திரு நயினார் த/பெ.சுப்பையா தேவர், கீழத்தெரு, அகரம் | 3780/– | 567/– | 4347/– |
| 3. | வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் பனைமரங்கள் தவிர இதர மரங்களின் மகசூலை அனுபவிக்கும் உரிமம் (2009–2010 முதல் 2011–2012 வரை) | திரு சங்கரன், த/பெ. ராமலிங்க தேவர், கீழத்தெரு, அகரம் | 21105/– | 3166/– | 24271/– |

எனவே கடந்த ஆண்டு உரிமத்தொகையை விட 15 சதவீதம் உயர்வு செய்து மேற்படி குத்தகைதாரர்களுக்கு மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீடித்து (2012–2013 முதல் 2014–2015 வரை மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/1059/2009

| | | | |
|---|---|---|---|
| | 30. | தூத்துக்குடி மாநகராட்சியில் செயல்படுத்த வேண்டிய திட்டப் பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களின் நாள் 12.03.2012ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் செயல்முறை ஆணை எண் வி7/2339/2012ல் தெரிவிக்கப்பட்டுள்ள பிரகாரம் மாநகராட்சி எல்கைப்பகுதியான நான்காவது இரயில்வே கேட் பகுதியில் போக்குவரத்து நெருக்கடியினை தவிர்ப்பதற்காக புதிதாக மேம்பாலம் அமைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. தற்போது அவ்விடத்தில் போக்குவரத்து அதிகமாக இருப்பதால் மேம்பாலம் அவசியமாக தேவைப்படுகிறது. மேம்பாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.20.00 கோடிக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:**<br><br>மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணிக்குரிய மதி தொகையினை நகர் மற்றும் ஊரமைப்பு துறையின் மூலமாக முழு மானியம் செய்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/03100/2012 | 57. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 31. | தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியான ரோச் பூங்காவில் பொது மக்கள் மாலை நேரத்தை பயன் உள்ளதாக கழிக்கவும், நகரினை அழகுபடுத்தும் விதமாகவும் படகு குழாம் அமைக்கும் பணிக்கு ரூ.40.00 லட்சம் செலவினம் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 58. அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணிக்கு சுற்றுலாத்துறை மூலம் அரசு மான்யம் பெற செயல்படுத்த அனுமதிக்கலாம்.<br><br>இ1/03100/2012 | |
| | 32. | தூத்துக்குடி மாநகராட்சி ஐந்து ஊராட்சிகள் (அத்திமரப்பட்டி, மீளவிட்டான், முத்தையாபுரம், சங்கரப்பேரி, தூத்துக்குடி ரூரல்) ஆகிய உள்ளாட்சி அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு அரசாணை எண் 7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 03.01.2011ன்படியும் அரசு ஆணை (நிலை) எண் 143 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 19.09.2011ன்படியும் ஒருங்கிணைக்கப்பட்டு நான்கு மண்டலங்களாக செயல்பட்டு வருகின்றது. தற்போது நான்கு மண்டலங்களிலும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது.<br><br>அரசு ஆணை (நிலை) எண் 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 26.09.1996ல் வெளியிடப்பட்டுள்ள பணி விதிகளைப் பின்பற்றி பணியிடங்களை நிரப்பப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. 05.08.2008 தேதியில் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்ட பின்னர் இம்மாநகராட்சிக்கு எவ்வித பணியிடமும் இதுவரை அனுமதிக்கப்படவில்லை. மேலும் தற்போது நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு மண்டலத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். போதிய பணியிடங்கள் இல்லாத காரணத்தினால் மண்டல அலுவலகங்கள் ஆரம்பிக்கப்படாத நிலை உள்ளது. எனவே மேற்படி அரசாணைகளின்படி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களை இணைப்பில் கண்டவாறு மாநகராட்சி பணியிடங்களாக ஈர்த்துக் கொள்ளவும் கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதிகளுக்கு அரசு அனுமதி பெற்று விலக்களிக்கவும் உரிய ஊதிய ஏற்ற முறை நிர்ணயம் செய்யவும் அனுமதிப்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:**<br><br>இணைப்பில் கண்ட பணியிடங்களை மாநகராட்சி பணியிடங்களாக ஒருங்கிணைத்து ஈர்த்துக் கொள்ளவும், அதில் பணிபுரியும் பணியாளர்களையும் மாநகராட்சிப் பணியாளர்களாக உரிய கல்வித் தகுதி மற்றும் தொழில் நுட்பத் தகுதிகளுக்கு விலக்களிக்க அரசின் ஒப்புதல் பெறவும் மாமன்றம் தீர்மானிக்கலாம். | **59.** அலுவலகக் குறிப்பின்படி தீர்மானிக்கப்பட்டது |

| வ. எண் | மாநகராட்சி யுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் பெயர் | ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள் ள பணியிடத்தின் | | பணியிடம் அனுமதிக்கப்பட் ட அ.ஆ.எண். மாவட்ட ஆட்சியர் கடிதம் எண் | தற்போது பணி புரியும் பணியாளர்–களின் எண்ணிக்கை | காலிப் பணியிடங்–களின் எண்ணிக்கை | மாநகராட்சி பணி விதிகளின்படி ஒருங்கிணைக்கப்பட வேண்டிய | | மாநகராட்சி பணியில் ஈர்க்கப்பட வேண்டிய பணியாளர்கள் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெயர் மற்றும் ஊதிய ஏற்றமுறை | எண்ணி–க்கை | | | | பணியிடத்தின் பெயர் மற்றும் ஊதியம் ஏற்ற முறை | பணியிட–த்தின் எண்ணிக்கை | | |
| 1 | தூத்துக்குடி ரூரல் | ஊராட்சி செயலாளர் 2500–5000+500 | 1 | 03/08 நாள் 25.08.08 | 1 | – | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் 5200–20200+2400 | 1 | 1 | தூத்துக்குடி மாநகராட்சியுடன் ஒருங்கிணைக்கப்ட்டுள்ள 5 கிராம ஊராட்சிகளில் பணிபுரிந்து வரும் ஊராட்சி செயலாளர்களில் 1) திருமதி. ஜெ. சுஜாதா சாந்தி, 12ம் வகுப்பும், 2) திரு. டி.முத்துகமாரவேல் பி.காம் பட்டப் படிப்பும், 3) திரு டி. ஞான ஆசிர் 12ம் வகுப்பும் தட்டச்சும் 4) திரு எம். மலைச்சாமி 10ம் வகுப்பும், 5) திரு எம், மால்முருகன் 10 வகுப்பும் (தற்காலிக பணிநீக்கம்) தேர்ச்சி பெற்றுள்ளனர். 1996ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி சார்நிலை பொதுப்பணி விதி எண்.4ல் இளநிலைப் உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடத்திற்கான கல்வித் தகுதியானது மேல்நிலைப்பள்ளி கல்வி தேர்ச்சி மற்றும் தட்டச்சில் ஆஙகிலம் மற்றும் தமிழ் ஏதாவது ஒன்றில் மேல்நிலையும் மற்றும் மற்றொன்றில் கீழ்நிலையும் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட 5 |
| | அத்திமரப்பட்டி | ஊராட்சி செயலாளர் 2500–5000+500 | 1 | அரசாணை.எண் (நிலை) 22 நாள். 14.02.2011 | 1 | – | | 1 | 1 | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முத்தையாபுரம் | ஊராட்சி செயலாளர் 2500–5000+500 | 1 | அரசாணை எண் (நிதி) 234 நாள்.01.06.2009 | 1 | – | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் 5200–20200+2400 | 1 | 1 | ஊராட்சி செயலாளர்கள் பணியிடத்தில் 1) வரி கேட்புகளைத் தயாரித்தல் மற்றும் அனுப்புதல், 2) ஊராட்சி வரி உள்ளிட்ட வருவாய் வசூல் மற்றும் ரசீது புத்தகங்கள் மற்றும் தொடர்புடைய இதர பதிவேடுகள் பராமரித்தல், 3) அருவருக்கத்தக்க மற்றும் அபாயகரமான தொழில்களுக்கான கடன் வசூல் செய்தல் 4) ரொக்கப் புத்தகம் உள்ளிட்ட வருவாய் மற்றும் செலவினம் தொடர்புடைய பதிவேடுகள் பராமரித்தல், 5) ஊராட்சியின் சொத்து பதிவேடு பராமரித்தல். 6) ஊராட்சியின் மாதாந்திர கூட்ட ஏற்பாடுகளை செய்தல் 7) கிராம சபை கூட்ட ஏற்பாடுகளை செய்தல் 8) ஊராட்சி தீர்மானஙகளை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் உதவி இயக்குநர், ஊராட்சி அவர்களுக்கு அனுப்புதல் 9) செலுத்துச்சீட்டுகளுக்கு இலக்கமிடுதல், ரொக்கப் புத்தகத்தில் பதிவு செய்தல் மற்றும் நிர்வாக |
| | சங்கரப்பேரி | ஊராட்சி செயலாளர் 2500–5000+500 | 1 | அரசாணை எண். 234 நிதி (ஊதிய குழு) துறை நாள் 01.06.09 | 1 | – | | 1 | 1 | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மீளவிட்டான் | ஊராட்சி செயலாளர் 2500–5000+500 | 1 | த.நா.அ. எண் (நிலை) 22 நாள். 14.02.2011 | – | | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் 5200–20200+2400 | 1 | 1 | அலுவலர், உதவி இயக்குநர், ஊராட்சி அவர்களுக்கு அறிக்கை அனுப்புதல் 10) ஊராட்சியில் குடிநீர் வழங்குதல், தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் சாலைப் பராமரிப்பு உள்ளிட்ட பராமரிப்பு பணிகள், மத்திய மாநில அரசுகளால் கொண்டு வரப்படும் திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியக வற்றில் கிராம ஊராட்சி தலைவருக்கு உதவுதல்"+மு4 11) ஊராட்சியின் வரவு செலவு திட்டம் தயாரித்தல், 12) பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் பதிவேடு பராமரித்தல் 13) கிராம ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள், ஊராட்சி புறம்போக்கு நிலங்கள் பற்றிய பதிவேடுகள் பராமரித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டுள்ளார்கள்" ஆகிய பணிகள் மேற்பார்வையிடுதல் மற்றும் மத்திய மாநிலை அரசுகளின் திட்டப் பணிகள் செயல் படுத்துதல் போன்ற அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கு கால முறை ஊதியம் முறையே 2500–5000மற்றும் தர ஊதியம் 500 மற்றும் 4800–10000 மற்றும் தர ஊதியம் 1400 (வரிசை எண். 4) வழங்கப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடத்திற்கான காலமுறை ஊதியத்தைவிட குறைவாக இருந்தாலும் இவர்கள் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணிகளுக்கு இணையாக பணிப் |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | பொறுப்புகள் மேற்கொண்டு வருகின்றனர். எனவே மேற்கண்ட 5 ஊராட்சி செயலாளர்களையும் கல்வித் தகுதி இல்லாதவர்களுக்கு இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடஙகளுக்கான கல்வித் தகுதியிலிருந்து விலக்களித்தும் தட்டச்சு தேர்வு பெறுவதிலிருந்து விலக்களித்தும் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடத்தில் ஈர்த்துக் கொள்ளலாம். இந்த ஐந்து பணியிடஙகளையும் தூத்துக்குடி மாநகராட்சிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் நிலையிலான பணியிடத்துடன் கூடுதலாக சேர்த்துக் கொள்ள அரசின் ஆணை பெறலாம். |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | முத்தையாபுரம் | வருவாய் உதவியாளர் 4800–10000+1400 | 1 | தூ.மா.ஆ.த. ந.க.எண் ஊநி3/2677/06 நாள்.20.08.2007 | 1 | – | வரி வசூலர் 5200–20200+2400 | 1 | 1 | தூத்துக்குடி மாநகராட்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள 5 கிராம ஊராட்சிகளில் முத்தையாபுரம் கிராம ஊராட்சியில் திரு எஸ். சீனிவாசகண்ணன் என்பவர் மட்டும் 4800–10000 (தரஊதியம் 1300) என்ற ஊதிய விகிதத்தில் வருவாய் உதவியாளராகப் பணிபுரிந்து வருகின்றார். கிராம ஊராட்சியிலும தனியர் வரிவசூல் பணியினைக் கவனித்து வருதால். இம்மாநகராட்சியில் காலியாக உள்ள ஒரு வருவாய் உதவியாளர்(மாநகராட்சி பணிவிதிகளின்படி வரிவசூலர்) பணியிடத்தில், வருவாய் உதவியாளருக்கான காலமுறை ஊதியம் 5200–20200 மற்றும் தர ஊதியம் ரூ.2400 ல் ஈர்த்துக் கொள்ளஅரசின் அனுமதி பெறலாம். |

| வ. எண் | மாநகராட்சி யுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் பெயர் | ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடத்தின் | | பணியிடம் அனுமதிக்கப்பட்ட அ.ஆ.எண். மாவட்ட ஆட்சியர் கடிதம் எண் | தற்போது பணி புரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | காலிப் பணியிடங்–களின் எண்ணிக்கை | மாநகராட்சி பணி விதிகளின்படி ஒருங்கிணைக்கப்பட வேண்டிய | | மாநகராட்சி பணியில் ஈர்க்கப்பட வேண்டிய பணியாளர்கள் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெயர் மற்றும் ஊதிய ஏற்றமுறை | எண்ணி–க்கை | | | | பணியிடத்தின் பெயர் மற்றும் ஊதியம் ஏற்ற முறை | பணியிட–த்தின் எண்ணிக்கை | | |
| 3 | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 2500–5000+500 | 1 | தி.மா.ஆ.த. ந.க.எண் மூமு52647/81 நாள்.15.05.1981 | 1 | – | துப்புரவுப் பணியாளர் 4800–10000+1300 | 1 | 1 | தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியுடன் இணைக்கப்பட்ட முத்தையாபுரம் கிராம ஊராட்சியில் பணிபுரிந்து வரும் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 4800–10000+1300 | 1 | தி.மா.ஆ.த. ந.க.எண் மூமு52647/81 நாள்.15.05.1981 | 1 | – | | 1 | 1 | 15 துப்புரவுப் பணியாளகள் முறையே 4800–1000 தர ஊதியம் 1300(வரிசை எண். 2 முதல் 7 வரை), 2500–5000 தர ஊதியம் 500 (வரிசை எண். 1 மட்டும்) மற்றும் 1300–3000 தர ஊதியம் 300(வரிசை எண். 8 முதல் 15வரை) பெற்று வருகின்றனர். இவர்களை மாநகராட்சி பணி விதிகளின்படி , மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர் ஊதிய ஏற்ற முறையான 4800–10000 தர ஊதியம் 1300ல் மேற்காணும் 15 துப்புரவுப் பணியாளர்களையும் 15 துப்புரவு பணியிடஙகளையும் தூத்துக்குடி மாநகராட்சியுடன் ஈர்த்துக் கொள்ள அரசின் அனுமதி பெறலாம். |
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 4800–10000+1300 | 1 | தூ.மா.ஆ.த. ந.க.எண் மூமுவ15/54837/93 நாள்.16.07.1993 | 1 | – | | 1 | 1 | |
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 4800–10000+1300 | 1 | தி.மா.ஆ.த. ந.க.எண் மூமு123563/85 நாள்.11.09.1985, நாள்.10.09.1985, | 1 | – | | 1 | 1 | |
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 4800–10000+1300 | 1 | தி.மா.ஆ.த. ந.க.எண் மூமு123563/85 நாள்.11.09.1985, நாள்.10.09.1985, | 1 | – | | 1 | 1 | |
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 4800–10000+1300 | 1 | தி.மா.ஆ.த. ந.க.எண் மூமு123563/85 நாள்.11.09.1985, நாள்.10.09.1985, | 1 | – | துப்புரவு பணியாளர் 4800–10000+1300 | 1 | 1 | |
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 4800–10000+1300 | 1 | தூ.மா.ஆ.த. ந.க.எண் மூமுவ15/54837/93 நாள்.16.07.1993 | 1 | – | | 1 | 1 | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 1300–3000+300 | 1 | மு.மு.ஊ.த. ந.க.எண் 01/1998–99 நாள்.01.4.1998 | 1 | – | | 1 | 1 | |
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 1300–3000+300 | 1 | மு.மு.ஊ.த. ந.க.எண் 01/1998–99 நாள்.01.4.1998 | 1 | – | | 1 | 1 | |
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 1300–3000+300 | 1 | மு.மு.ஊ.த. ந.க.எண் 01/1998–99 நாள்.01.4.1998 | 1 | – | | 1 | 1 | |
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 1300–3000+300 | 1 | மு.மு.ஊ.த. ந.க.எண் 01/1998–99 நாள்.01.4.1998 | 1 | – | | 1 | 1 | |
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 1300–3000+300 | 1 | மு.மு.ஊ.த. ந.க.எண் 01/1998–99 நாள்.01.4.1998 | 1 | – | துப்புரவு பணியாளர் 4800–10000+1300 | 1 | 1 | |
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 1300–3000+300 | 1 | மு.மு.ஊ.த. ந.க.எண் 01/1998–99 நாள்.01.4.1998 | 1 | – | | 1 | 1 | |
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 1300–3000+300 | 1 | மு.மு.ஊ.த. ந.க.எண் 01/1998–99 நாள்.01.4.1998 | 1 | – | | 1 | 1 | |
| | முத்தையாபுரம் | துப்புரவுப் பணியாளர் 1300–3000+300 | 1 | மு.மு.ஊ.த. ந.க.எண் 01/1998–99 நாள்.01.4.1998 | 1 | – | | 1 | 1 | |

| | | | |
|---|---|---|---|
| | 33. | தூத்துக்குடி மாநகராட்சி ஐந்து ஊராட்சிகள் (அத்திமரப்பட்டி, மீளவிட்டான், முத்தையாபுரம், சங்கரப்பேரி, தூத்துக்குடி ரூரல்) ஆகிய உள்ளாட்சி அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு அரசாணை எண் 7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் **03.01.2011**ன்படியும் அரசு ஆணை (நிலை) எண் **143** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் **19.09.2011**ன்படியும் ஒருங்கிணைக்கப்பட்டு நான்கு மண்டலங்களாக செயல்பட்டு வருகின்றது. தற்போது நான்கு மண்டலங்களிலும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>அரசு ஆணை (நிலை) எண் **237** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் **26.09.1996**ல் வெளியிடப்பட்டுள்ள மாநகராட்சிப் பணி விதிகளைப் பின்பற்றி பணியிடங்களை நிரப்பப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>மேற்படி பணி விதிகளில் உதவி ஆணையர் (வார்டு அலுவலகம்) பணியிடம் வகுப்பு **1**ல் வகை **2**ன் கீழ் இடம் பெற்றுள்ளது. எனவே மாநகராட்சிப் பணி விதிகள் நான்கு மண்டல அலுவலகங்களுக்கும் நான்கு உதவி ஆணையர் வார்டு அலுவலகம் பணியிடம் புதிதாக தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:**<br><br>மாநகராட்சியின் மண்டல அலுவலகங்களில் அனைத்து நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மாநகராட்சிப் பணி விதிகளின் குறியீட்டின்படி நான்கு உதவி ஆணையர் (வார்டு அலுவலகம்) பணியிடம் புதிதாக தோற்றுவிக்க அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றம் அனுமதி வழங்கலாம். | **60.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 34. | தூத்துக்குடி மாநகராட்சி பிறப்பு, இறப்பு பதிவேட்டு அறையில் **1872**ம் ஆண்டு முதல் உள்ள பிறப்பு, இறப்பு பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு கணினி மயமாக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றது.<br><br>மேற்படி பதிவேடுகள் அனைத்தும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். ஆனால் இவற்றில் **1999**ம் ஆண்டு வரையிலான பதிவேடுகளில் பெரும்பாலானவற்றின் மேல் அட்டைகள் கிழிந்த நிலையிலும், சில பதிவேடுகளில் உட்புற காகிதங்கள் கிழிந்த நிலையிலும் உள்ளன. எனவே மேற்படி பதிவேடுகளின் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு கிழிந்த மற்றும் பழுதடைந்த பதிவேடுகளை ஒட்டி சீர்செய்யவும், தேவையான மேலட்டைகளை மாற்றி புதுப்பித்துக் கொள்ளவும், விலைப்புள்ளிகள் பெற்று இப்பணியினை மேற்கொள்ளவும் இதற்கான செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>எச்1/5127/2012 | **61.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 35. | தூத்துக்குடி மாநகராட்சி பிறப்பு, இறப்பு பதிவேட்டு அறையில் **1872**ம் ஆண்டு முதல் உள்ள பிறப்பு, இறப்பு பதிவேடுகள் பராமரிக்கப்பட்டும், அப்பதிவேடுகளில் இருந்து சான்றிதழ் கேட்டு விண்ணப்பிப்பவர்களுக்கு கணினி மயமாக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டும் வருகின்றன.<br><br>மேற்படி பதிவேடுகளில் **2004**ம் ஆண்டும் அதற்கு மேற்பட்ட வருடங்களில் உள்ள பிறப்பு, இறப்பு நிகழ்வுகள் கணினியில் பதிவு செய்யப்பட்டு, சான்றிதழ் வேண்டுவோர் தூத்துக்குடி மாநகராட்சி இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.<br><br>ஆனால் **1872** முதல் **2003** வரையிலான பிறப்பு, இறப்பு பதிவுகள் கணினியில் பதிவு செய்யப்படாமல் இருப்பதால் மேற்படி ஆண்டுகளில் உள்ள நிகழ்வுகளில் இருந்து சான்றிதழ் கேட்டு விண்ணப்பிப்பவர்களுக்கு புதியதாக கணினியில் பதிவு செய்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் பொது மக்களுக்கு குறித்த நேரத்தில் சான்றிதழ் வழங்குவதில் சிரமம் இருந்து வருகிறது. | **62.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | எனவே மேற்படி காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு முதற்கட்டமாக சான்றிதழ் குறித்து அதிகப்படியான விண்ணப்பங்கள் பெறப்படும் ஆண்டுகளான **1986** முதல் **2003** வரையிலான பதிவேடுகளில் உள்ள பிறப்பு, இறப்பு பதிவு நிகழ்வுகளை கணினியில் பதிவு செய்திட தனியார் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கலாம். இதற்கான ஒப்புதலும் செலவினங்களுக்கான அனுமதியும் வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: அனுமதிக்கலாம்.<br>எச்1/5126/2012 | |
| | 36. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் வார்டு எண் **3, 5, 17, 18, 34** பேக்கேஜ் I-ஆக தனியார் மூலம் Solid Waste Management செய்வதற்கு **10.02.2012** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பேக்கேஜ் Iல் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் தொழில்நுட்ப விபரங்கள் சரியாக இருந்த ஒரு எண்ணம் Price bid **07.03.2012**ம் தேதி அன்று திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.<br><br>Our land Engineering Works, Tuticorin – ரூ.**1250**/MT என விலை விகிதம் கொடுத்து இருந்தனர். அவர்களிடம் Negotiation கேட்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு Negotiation rate கொடுத்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு<br><br>**1119**/MT என விலை விகிதம் கொடுத்துள்ளனர். பெறப்பட்ட விலைப்புள்ளி Estimate rate–ஐ விட குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியை அங்கீகாரம் செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. தற்போது அவ்விடத்தில் சுகாதார பணிகள் சரியாக நடைபெறுவதற்கும் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், சுகாதார பணி மிக அவசியமாக இருப்பதால் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. முதலில் ஓராண்டு கால பராமரிப்புக்கு விடவும், அதன் பின்னர் **2** வருடங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மாமன்றம் ஒப்புதல் பெற்று பணி திறன் பொருத்து நீட்டித்து கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>எச்1/10003/10 | **63.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 37. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் வார்டு எண் **48, 49, 54, 55, 57** பேக்கேஜ் IIஆக தனியார் மூலம் Solid Waste Management செய்வதற்கு **10.02.2012** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பேக்கேஜ் IIல் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் தொழில்நுட்ப விபரங்கள் சரியாக இருந்த ஒரு எண்ணம் Price bid **07.03.2012**ம் தேதி அன்று திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.<br><br>Our land Engineering Works, Tuticorin – ரூ.**1250**/MT என விலை விகிதம் கொடுத்து இருந்தனர். அவர்களிடம் Negotiation கேட்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு Negotiation rate கொடுத்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு<br><br>**1119**/MT என விலை விகிதம் கொடுத்துள்ளனர். பெறப்பட்ட விலைப்புள்ளி Estimate rate–ஐ விட குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியை அங்கீகாரம் செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. தற்போது அவ்விடத்தில் சுகாதார பணிகள் சரியாக நடைபெறுவதற்கும் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், சுகாதார பணி மிக அவசியமாக இருப்பதால் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. முதலில் ஓராண்டு கால பராமரிப்புக்கு விடவும், அதன் பின்னர் **2** வருடங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மாமன்றம் ஒப்புதல் பெற்று பணி திறன் பொருத்து நீட்டித்து கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>எச்1/10003/10 | **64.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

38. தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் திறந்தவெளி கழிப்பிடங்கள் உள்ள பகுதிகளான கீழ்க்கண்ட இடத்தில் புதிதாக கழிப்பிடம் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகள் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | இடம் | மதிப்பீட்டுத் தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 5 | தளவாய்புரம் | 4.00 |
| 2 | 3 | சில்வர்புரம் (லூசியா காலனி) | 4.00 |
| 3. | 20 | திரேஸ்புரம் உப்புச் சங்கம் அருகில் | 4.00 |
| 4. | 21 | திரேஸ்புரம் அண்ணா காலனி அருகில் | 4.00 |
| 5. | 26 | வரதராஜபுரம் சத்துணவு மையம் அருகில் | 4.00 |
| 6. | 37 | முருகேசன் நகர் | 4.00 |
| 7. | 44 | திருச்செந்தூர் ரோடு, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பின்புறம் | 4.00 |
| 8. | 44 | அரசு மருத்துவக்கிடங்கு எதிர்புறம் | 4.00 |
| 9. | 50 | செல்சீனி காலனி | 4.00 |
| 10. | 51 | காதர் மீரான் நகர் | 4.00 |
| 11. | 54 | தங்கம்மாள்புரம் | 4.00 |
| 12. | 60 | லேபர் காலனி | 4.00 |
| | | **மொத்தம்** | **48.00** |

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை அரசு நிதி பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத் தொகையினை ஈடு செய்யலாம்.

இ1/15361/11

**65.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

39. இம்மாநகராட்சி தெற்கு மண்டல பகுதி சுகாதாரப்பிரிவிற்கு பயன்படுத்தப்பட்ட வாகன டிராக்டர் மற்றும் பவர் டிரில்லருக்கு எரிபொருள் வாங்கிய வகைக்கு மெசர்ஸ் தனுஷ்கோடி டியூஸ் சர்விஸ், திருச்செந்தூர் மெயின் ரோடு, முத்தையாபுரம், தூத்துக்குடி என்ற நிறுவனத்திடம் செப்டம்பர் 2011 முதல் பிப்ரவரி 2012 வரை டீசல் பில் வரப்பெற்றுள்ளது. மேற்படி எரிப்பொருள் தொகை ரூ.99260/– மாநகராட்சியின் மூலம் வழங்கலாம். மேலும் மேற்கண்ட நிறுவனத்திடம் தொடர்ச்சியாக எரிபொருள்கள் வாங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம்.

எச்3/

**66.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

40. இம்மாநகராட்சியின் 2012–2013 ஆண்டின் உத்தேச வரவு மற்றும் செலவு மதிப்பீடு மற்றும் 2011–2012ம் வருடத்திய திருத்திய வரவு மற்றும் செலவு மதிப்பீடு கீழ்காணும் நிதிகளுக்கு (1) வருவாய் மற்றும் மூலதன நிதி, 2) குடிநீர் மற்றும் வடிகால் நிதி, 3) கல்வி நிதி ஆகிய வகைகளுக்கு ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம்.

பி1/5128/2012

**67.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

41. இம்மாநகராட்சியில் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை பொதுமக்களுக்கு விரைவாக வழங்கும் வகையில் தக்கல் முறையில் அன்றைய தினமே வழங்கும் திட்டத்தை அமலபடுத்திடவும் ஏற்கனவே உள்ள கட்டணங்களுடன் கூடுதல் கட்டணமாக பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் கூடுதல் கட்டணம் வசூல் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** அனுமதிக்கலாம்.

எச்1/

**68.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | 42. தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திலிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் GF II/TNUIFSL/Traffic and Transportation studies/2011 நாள் 24.11.2011ல் தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் தற்போது முதல் 2030ம் ஆண்டு வரையிலான போக்குவரத்து நெருக்கடிகளை சரிசெய்யும் பொருட்டு குறுகிய, நடுத்தர நீண்டகால போக்குவரத்து மேலாண்மை திட்ட அறிக்கை தயார் செய்து உலக வங்கி நிதி பெற்று மேற்படி திட்ட அறிக்கையின்படி செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து மேலாண்மை திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு 35மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:**<br><br>மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட செலவினம் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் செய்யலாம்.<br><br>எப்1/21218/05 | **69.** அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

மேயர்,
மாமன்றம், தூத்துக்குடி.

இடம்: தூத்துக்குடி
நாள் : .03.2012